# செந்தமிழ்

தொகுதி 80 ஜூன் 1986 பகுதி II

— உள்ளே —

பரிமேலழகரும் சேனாவரையரும் ஒருவரா?
டாக்டர் தே. ஆண்டியப்பன்

தமிழன் தந்த விஞ்ஞானம்
—சு. சிவபார்வதி

அருவியின் வரலாறு
—பழனி. அரங்கசாமி

நூல் மதிப்புரை

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

மதுரைத் தமிழ்ச்சங்கம் - மதுரை - 9.

ஆசிரியர் : என். எஸ். முத்துமலைச்சாமி பி.ஏ பி.எல்.

# செந்தமிழ்

தொகுதி 80 ஜூன் 1986 பகுதி II

உள்ளே

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | பரிமேலழகரும் சேனாவரையரும் ஒருவரா? —டாக்டர் தே. ஆண்டியப்பன் | 39 |
| 2. | தமிழன் தந்த விஞ்ஞானம் —சு. சிவபார்வதி | 44 |
| 3. | அருவியின் வரலாறு (கவிதை) | 53 |
| 4. | கோவில் திருட்டும் கொலைகளும் | 54 |
| 5. | புதுக்கவிதையும் மரபுக் கவிதையும் —டாக்டர் கு. அழகேசன் | 55 |
| 6 | இனியும் சுணங்கேல் —ஈழவன் | 59 |
| 7. | கடல் கடந்த கண்ணன் —பி. ஆர். ஸ்வாமி | 61 |
| 8. | சர்க்கரை வியாதி—நீரிழிவு —திரையன் | 68 |
| 9. | இயந்திரக் கலப்பையினால் ஏற்படும் தீங்கு | 70 |
| 10. | யானைப் பரிசு | 71 |
| 11. | நூல் மதிப்புரை | 72 |
| 12. | சங்கச் செய்திகள் | 73 |

பொறுப்பாசிரியர் : டாக்டர் பழநி. அரங்கசாமி

# பரிமேலழகரும் சேனாவரையரும் ஒருவரா?

- டாக்டர். தே. ஆண்டியப்பன்.
தமிழ்ப் பேராசிரியர்

வட நூற் கடலை நிலை கண்டுணர்ந்தவர் சேனாவரையர். அவர் தம் தருக்க நூற் புலமையினையும் நுண்மாண் நுழை புலத்தினையும், அவரது தொல்காப்பிய சொல்லதிகார உரையினாற் கண்டு தெளிகிறோம். இவர் நச்சினார்க்கினியருக்கு முற்பட்டவர் என்று கூறப்படுகிறது. இவரும் பரிமேலழகரும் ஒருவராக இருந்திருப்பரோ எனும் வினாவினை எழுப்பி அதற்கு விடைகாண முயல்வதே இக்கட்டுரை. ஒருவராயின் இருவேறு பெயர்களில் ஏன் வாழ்ந்திருக்க வேண்டும் என்று இயல்பாகவே எழும் ஐயப்பாட்டுக்கு இக்கட்டுரையில் விடையில்லை. இருபெரு உரையாசிரியரும் ஒருவரே என்று நாம் ஒத்துக்கொள்ளாவிடினும், சிற்சில நுணுக்கமான இடங்களில் பொருளும் விளக்கமும் கொடுத்திருப்பதை ஒப்பிட்டுக் காணுங்கால் இருவரும் ஒருவராயிருப்பரோ என்று எண்ணும் சபலம் ஏற்படுகிறதோ டன்றி ஒருமைப்பாடுள்ள புலமை உள்ளத்தையும் காணமுடிகிறது.

— ஆசிரியர்.

கருதுகோள் என்ற முறையில் புதிய செய்தி ஒன்றை உங்கள் முன்வைக்க விரும்புகிறேன். கிடைக்கப்பெறும் தடயங்களின் வலுவை இப்போது நிர்ணயிக்க முடியாது என்றாலும், ஆய்வாளர்களின் பார்வைக்குள் அகப்படும் போது நிச்சயம் ஒரு முடிவு தெரியவரும் என்ற நம்பிக்கை இதனை எழுதத் தூண்டுகிறது.

பரிமேலழகர் திருக்குறளுக்கு உரையெழுதியவர். சேனாவரையர் தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு உரையெழுதியவர். மேற்கொண்ட பணியில் சிறப்புற்றோங்கிய உரையாசிரியர் என்று இவர்களை எல்லோரும் பாரட்டுவதுண்டு. ஆனால் இருவரும் ஒருவரே என்று எண்ணுமாறு சில சிந்தனையோட்டம் கோடிட்டுக் காட்டுகிறது. வரலாற்றுத் தொடர்பாலும் உரையழகில் வந்து போகும் சில கருத்தின் தொடர்பாலும் இருவரும் ஒருவரே என்ற எண்ணம் முன்வந்து நிற்கிறது. பிற உரைகளை மறுப்பது வட

மொழிக் கல்வியில் சிறந்து நிற்பது, மூலநூல் ஆசிரியரிடம் மதிப்பு வைப்பது, அதிகார இயைபு காட்டுவது, எண்ணற்ற நூல்களை மேற்கோள் காட்டுவது போன்ற பண்புகள் இருவரிடமும் உண்டு. ஆனால் இப்பொதுப் பண்பு, பிற ஆசிரியர்களிடமும் அமைவது உண்டு. ஆதலின் வரையறை என்று வகுத்துக்கொள்வது கடினமே. இருந்தாலும் சில எண்ணங்கள் இருவர் வாக்கிலும் ஒன்றுபோல் அமைவதைப் பார்த்தால் இதயம் ஒன்றே; இருவரும் ஒருவரே என்று கருதவேண்டியிருக்கிறது.

சொல்லதிகாரம் கிளவியாக்கம் பகுதியில் சிறப்புப் பெயரும் இயற்பெயரும் இணைந்து வருவதற்கு ஓர் சான்று காட்டவேண்டும். சேனாவரையரின் நெஞ்சம் தோய்ந்த கருத்தொன்றே சான்றாக வெளிவருகிறது. தெய்வப்புலவன் திருவள்ளுவன் என்ற எழுதிச் செல்கிறார். வள்ளுவரைப் பற்றிய உயர்ந்த மதிப்பீடு அவசியம் இருந்ததால் அவ்வுள்ளம் சொற்களில் புலப்படுகிறது. அக்கருத்து நெஞ்சில் நிலை பெற்று விட்டால் எளிதில் மாறாது. பிற நூல்களை எழுதும் போதும் அவ்வெண்ணம் இடையறாது வந்து நிற்கும்.

அறத்துப்பாலுக்குத் தோற்றுவாய் எழுதும் பரிமேழலகரின் சொற்களை இப்போது நினைத்துப் பார்க்கின்றேம். "ஈண்டுத் தெய்வப்புலமை திருவள்ளுவரால் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக் கொள்ளப்பட்டது" என்பார். இவரது சொற்களிலும் தெய்வப் புலமை திருவள்ளுவர் என்று வருவானேன்? இரண்டும் ஒரே நெஞ்சம் என்பதுதானே உண்மை.

சரி; ஒருவரிடம் இருந்து ஒருவர் பெற்ற கருத்து என்று நினைக்கலாகாதா? ஆனால் இதுபோன்ற நினைப்பொற்றுமை வேறு சில இடங்களிலும் அமைவதால் முற்கூறிய கருத்தே வலிமை பெறுகின்றது.

திருக்குறளில் ஐந்தவித்தான் ஆற்றலை விளக்கும் பகுதியில் கபிலரது பாட்டு என்பதுபோல் உருபு செய்யுட் கிழமைக் கண் வந்தது என்று பரிமேலழகர் கூறுவார். சேனாவரையரும் செய்யுள் கிழமையை உணர்த்த கபிலரது பாட்டு என்பதையே முன்வைக் கிறார். அஃறிணை முடிபின செய்யுள் உள்ளே என்ற பகுதியை விளக்கமுற்படும்போது எம்மை நினையாது விட்டனரேல் விட்டகல்க என்ற சிலம்பு வரிகளை எடுத்துரைப்பார் சேனாவரையர். அப்பகுதி

முழுவதும் அவரது நெஞ்சை மிகவும் கவர்ந்திருக்க வேண்டும். பரிமேலழகர் 255-ம் குறளுக்கு விளக்கம் தரும்போது நம்மை மறந்தாரை நாமும் மறக்கற்பாலம் என்றாட்குச் சொல்லியது என்பார். இவ்வாறு நெஞ்சம் கவர்ந்த பகுதிகள் ஆங்காங்கே இருவருக்கும் சான்றாவதைக் காண்கின்றோம். கபிலர், வள்ளுவர், இளங்கோ மூவரும் இவ்வுரையாசிரியர் நெஞ்சில் இடம்பெற்று விட்டதால் இத்தகைய சிந்தனை இயைபைப் பார்க்கின்றோம். மொழி நடை முழுவதையும் இவ்வாறு ஒப்பிடலாமே; மின்கணிப்பான் மூலம் ஆய்வு செய்யலாமே என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் மொழி நடை ஒருவரிடமே இருவகை மூவகையாக மாறுவதுண்டு. நூலுக்கு ஏற்ப மாறுவதும் உண்டு. திரு.வி.க தம் முறையில் மூவித நடை தம்மிடம் இருந்ததாகக் குறிப்பிடுவதை நினைவில் கொள்ளவேண்டும். அதனால் நடையை விட சில சிந்தனைகள். ஆர்வங்கள், சில சொற்கள் வெளிப்பட்டு நின்று தடங்காட்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. குழல் யாழ் எனும் இரண்டைக் காட்டிலும் மழலை இனிது என்ற எண்ணமும் இருவரிடமும் நன்கு பதிந்து இருந்ததால் அதனை வெளிப்படுத்துவதும் உண்டு.

சில வரலாற்றுச் செய்திகளையும் பார்ப்பது நல்லது. பழம்பாடல் ஒன்று 'கலைஞர் ஒக்கைக் காவலனே போற்றுதமிழ்க் கூடல் பரிமேல் 'அழகியான் என்பான்' (பெருந் 1548) என்று குறிப்பிடும். ஒக்கை என்பது கொற்கையைச் சார்ந்த மாறோக்கம். மதுரை கொற்கை இருபகுதியும் பாண்டியர் தலைநகர். இருவிடங்களிலும் சேனாதிபதிகள் நியமிக்கப்படுவதுண்டு. பரிமேலழகர், குதிரை மீது ஏறிவரும் காவலர் மாத்திரமன்று; கலையிலும் தேர்ந்த வல்லாளர் என்பது புலப்படுகிறது. ஆதனால்தான் அரசியல் அறிவோடு படைநடத்தும் சிறப்போடு பொருட்பாலுக்கும் உரையெழுத முடிந்தது. கலையுணர்வு காமத்துப்பாலையும் சுவைகாணும்படி செய்தது. அறம்காக்கும் மன்னனின் சேனாதிபதி அறத்துப்பாலையும் விளக்க முன்வந்தது இயல்பே ஆகும்.

பரிமேலழகர் பற்றிய மற்றோர் செய்தியும் வியப்பூட்டுகின்றது. திருக்காஞ்சி வாழ் பரிமேலழகர், வள்ளுவர் நூற்கு வழிகாட்டினான் என்று தொண்டை மண்டல சதகம் கூறுவதுண்டு.

எனவே பரிமேலழகர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர் என்று முடிவு கட்டுவார் மு. இராகவையங்கார். விசயகண்ட கோபாலன் என்னும் தெலுங்குச்சோழனின் 22-ம் ஆட்சியாண்டில் (கி பி 1272) எழுந்த கல்வெட்டு. ஒன்று வண்டு வரப் பெருமாளான பரிமேலழகிய பெருமாள் தாதனிடம் நிலம் பெற்ற செய்தியைத் தருகிறது. இந்தப் பரிமேலழகர் மாறோக்கத்தை விட்டு, காஞ்சிக்குப் போனது எவ்வாறு?

இப்போது சேனாவரையர் நிலையைப் பார்ப்போம். ஆற்றூர்ச் சேனாவரையன் தம் நிலத்தையும் மனைகளையும் அவ்வூர் சிவன் கோவிலுக்கு (இறைவன் பெயர் சோமநாதர்) வழங்கிய செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது. அதன் காலம் கி.பி 1275. மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 7ம் ஆட்சியாண்டு என்பர். சேனாவரையரின் முன்னோர் வாழ்ந்த இடம் மிழலைக் கூற்றத்து பராந்தக நல்லூர் (புவனேக சுந்தர நல்லூர்) படைத் தலைவர் பதவி வகித்தவர் சேனாவரையர். இயற்பெயர் அழகப்பிரான் இடைக்கரை யாழ்வான். இப்போது அழகப்-பிரானையும் பரிமேலழகரையும் நினைத்துப் பாருங்கள். ஒற்கைப் காவலன் யார் என்பதை நினைத்துப் பாருங்கள். அழகர் பதவி ஏற்று பரிமேல் வருவது இயல்புதானே. இவர் எப்படி காஞ்சிக்குப் போனார் என்பதை ஆராய வேண்டும்.

பாண்டியர்க்கு மதுரையும் கொற்கையும் தலைநகர். சோழர்க்கு உறையூரும் காஞ்சியும் தலைநகர். கொற்கைத் தளபதியை விசய கண்ட கோபாலன் என்ற தெலுங்குச் சோழன் தன்னாட்டின் தளபதியாக ஆக்கியிருக்க வேண்டும். அதற்கு மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஒப்புதல் அளித்திருக்கலாம். இங்ஙனம் நாடும் ஊரும் விட்டுச்சென்று பதவி ஏற்பது இயல்பான நிகழ்ச்சியே. நிரம்பையர் காவலன் (திண்டிவனம்) பொப்பண்ண காங்கேயனை, வட இலங்கையில் குணபூஷண சிங்கை ஆரியன் சேனாதிபதி ஆக்கினான் என்று அடியார்க்கு நல்லார் வரலாற்றில் அறிகிறோம். தென்பாண்டி ஆழ்வார்க்குறிச்சி உலகநாதபிள்ளை திருவிதாங்கூர் மன்னருக்குத் தளபதியாகச் சென்றார் என்று

கேரள வரலாற்றில் அறிகிறோம். எனவே மாறோக்கத்துச் சேனாவரையர் ஆகிய அழகர் பிரான் என்ற ஒக்கைக் காவலர், காஞ்சிக்குச் சென்றதும் இயல்பே.

இருவரும் ஒருவர் எனில் வள்ளுவன் சீரும், தொல்காப்பியர் பெருமையும் அழகப்பிரான் என்ற உரையாசிரியரால் நிச்சயம் பெருமை பெற்றிருக்க வேண்டும். அந்நூல்களை நினைக்கும் போது அழகர் உரையும் நெஞ்சில் இடம்பெறும். எனவே தான் உமாபதி சிவனார் சங்கற்ப நிராகரணத்தில் (கி. பி. (1313) பரிமேல் அழகர் செய்த உரையைப் பாராட்டினார். வள்ளுவர் சீர் அன்பர் மொழி வாசகம் தொல்காப்பியமே தெள்ளுபரி மேலழகர் செய்த-வுரை என்று இணைத்துப்பேச இடமளித்தது. இக்கருத்தை உண்மைகாணும் எண்ணத்தில் மேலும் ஆராயலாம்.

குறிப்பு :

இன்றும் சேனாபதி குடும்பத்தினர் திருச்சி, சென்னை யில் வாழ்கின்றனர். சோமநாதன் என்ற பெயர் (ஆற்றூர் சோமநாத சாமியின் பெயர்) அக்குடும்பத்தில் பலபேருக்கு அமைந்துள்ளது. அதுவும் ஆய்வுக்கு உட்படவேண்டும்.

——X——

## சத்ய சாய்பாபாவின் அருளுரை

உன்னுடைய கடமையை நீசெவ்வனே ஆற்றுக; அட்டமா சித்திகளுக்கு ஆசைப்படாதே; சாதகனை அது மாயா உலகில் தள்ளி மீள விடாது. வாழ்க்கை எனும் இந்த அடர்ந்த கானகத் தில் பரம்பொருளின் நாமமாகிய துணையைக் கெட்டியாகப் பற்றிக் கொள்; அதுவே போதுமானது; உனது இதயமாகிய தோட்டத் தைச் சத்குணங்களாகிய எருதுகளைக் கொண்டு மனதாகிய ஏரைப்பூட்டி உழவாயாக. இந்த ஏர்த் தொழில் செய்யும்போது நல்லது தீயதைப் பிரித்துணரும் அறிவைச் சாட்டையாகக் கொள்க பெரும் துணிவாகிய உரத்தைப்போடு; அன்பாகிய விதைகளை ஊன்று; பக்தியாகிய மழை பொழியட்டும்; உணர்ச்சியாகிய களை களை வேருடன் அகற்று. இப்பணிகளை யெல்லாம் நீ குறைவறச் செய்யும் பொழுது பிரம்மானந்தம் என்னும் பரிபூரண விளைவைப் பெற்று மகிழ்வாய்.

— சத்யம் — சிவம் — சுந்தரம்.
பாகம் 1 - பக்கம் 126.

# தமிழன் தந்த விஞ்ஞானம்

சு. சிவபார்வதி

தூத்துக்குடி

விஞ்ஞானம் என்பது யாது? இயற்கை யெனும் ஆழங்காண இயலாப் பெருங்கணியை அகழ்ந்து அகழ்ந்து சென்று அது மறைத்து வைத்துள்ள உண்மைகளை வெளியேற்றும் துறையே விஞ்ஞானம் எனலாம். எல்லையற்ற ஆற்றல் கொண்ட இயற்கைக்கும் அதனை வென்று விட எண்ணும் மனிதனுக்கு நடக்கும் முடிவில்லாத பெரும் போரில் மனிதன் இயற்கையை எதிர்க்கப் பயன்படுத்தும் கருவியே விஞ்ஞானம் எனவும் கொள்ளலாம். விஞ்ஞானக் கருவி கொண்டு போரிடுங்கால், அவ்வவ்போது மானிடனுக்குச் சிறுசிறு வெற்றிகளும் பெரும் பெரு வெற்றிகளும் கிட்டுகின்றன. அவ்வெற்றிகளின் விளைவாகவே பற்பல கருவிகள் முகிழ்த்துள்ளன. அவை இக்கால மனிதனுக்கு வாழ்க்கை வசதிகளைப் பெருக்கித் தந்துள்ளன. மலை முழைகளில் அஞ்சி வாழ்ந்த மனிதன் விண்ணை முட்டும் மாட மாளிகையில் வாழ்கிறான்; அச்சம் என்னும் பேய்தனை அழித்து விட்ட பான்மையில் சிறப்புற்று வாழ்கிறான். ஆனால் அச்சமற்ற மனித வாழ்விலே அமைதி குலவுகின்றதா? விலங்குகட்கும் இயற்கையின் கொடுமைகட்கும் அஞ்சி வாழ்ந்தான் பண்டைக்கால மனிதன். இன்று விலங்குகள் அவனைக் கண்டு அஞ்சுகின்றன. இயற்கையின் கொடுமைகளைப் பொருட்படுத்த வேண்டாத அளவுக்கு விஞ்ஞானம் இக்கால மனிதனுக்கு உதவியுளளது. ஆயின், அமைதி குலவும் வாழ்க்கையை - இன்பமே நிலவும் எழில் சான்ற வாழ்க்கையை - அவன் பெற்றுளனோ?

விஞ்ஞானக் கருவிகள் பற்பலவாய்ப் பெருகிக் கால எல்லையும் இடப்பரப்பையும் சுருக்கி விட்டன. நாகரீகச் சிறப்பால் வாழ்க்கை வசதிகள் பெருகிட அவை வழி கோலின. கருவிகளின் முன்னேற்றம் இன்றைய மானிடனுக்கு நல்கியுள்ள நிலைமை எத்தகையது என்பதைச் சற்றே எண்ணிப் பார்மின். வளியினும் ஒலியினும் வல்விரைந்து செல்லும்வானூர்தி ஒர்பக்கம். அத்தகு வானூர்தியினை நல்கிய கருவியாளர்கள் அனைத்தையும் இமைக்கும் முன்

அழிக்கும் அணுகுண்டு இன்னோர் பக்கம். கருவி முன்னேற்றத்தால் மட்டும் நாகரீகம் சிறப்புடையதெனக் கருதுதல் கூடாது. மூக்குக் கண்ணாடி முதல் விண்ணில் பறக்கும் ராக்கெட் வரையிலும் உள்ள-யாவும் விஞ்ஞானத்தால் முகிழ்ந்த வெறுங்கருவிகளே யாகும். இன்றைய மனிதனது பரந்து பல்கியுள்ள வாழ்வினுக்கு அவை துணைபுரியவல்ல கருவிகளாம். விஞ்ஞானத்தின் விளைவுகளை எவரும் குறைத்து மதிப்பிட்டு விடுதல் இயலாது; கூடாது.

மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் விஞ்ஞானம் என்ற சொல் வழக்காற்றுக்கு வரும் முன்னர் தமிழன் விஞ்ஞானத்தைத் தன் வாழ்வில் – வாணிகத்தில் — தொழிலில் —நாகரீகத்தில் ஏனைய எல்லாவற்றிலும் கையாண்டுள்ளான்.

"புத்தம் புதிய கலைகள் -பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே-அந்த
மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை —அதைச்
சொல்லுந் திறமை தமிழ் மொழிக் கில்லை"

என்று பாரதி கூறுகிறான். விஞ்ஞானம் வியத்தகு முறையில் வளர இல்லையே என்று பாரதி வருந்துவதாகத் தான் கொள்ள வேண்டும். ஏனெனில்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்ரே தமிழன் விஞ்ஞானத்தின் எல்லாத் துறைகளிலும் தலை நின்றான். விஞ்ஞானத்தில் கீழ்க்-கண்ட துறைகளும் இருந்துள்ளன.

1. மானிடநூல் — anthropology
2. கணக்கியல் — mathematics
3. வானநூல் — astronomy
4. இயற்பியல் — physics.
5. வேதியியல் — chemistry
6. செடியியல் — botany
7. விலங்கியல் — zoology
8. கட்டிடக்கலை — architecture
9. மருத்துவம் — medicine
10. தருக்கநூல் — logic

மேற்கூறிய அறிவியலின் பல்துறைகளில் முன்னரிருந்த வண்ணத்தையும் இப்போதுள்ள நிலையையும் பார்ப்போம்.

மானிடநூல் (anthropology)

குமரி முனைக்குத் தெற்கே பரவியிருந்து பின் மறைந்து போன நிலப்பரப்பை மேல்நாட்டு அறிவியலறிஞர் "இலமூரியா' (Lemuria) என்று கூறுவர். இலெமூர்—Lemur என்ற சொல் மனிதக் குரங்கைக் குறிக்கும். இலெமூரியா என்னும் நிலப்பரப்பிலே ஆதி மக்கள் தோன்றிப் பெருகினார்கள் என ஹெக்கல்ஸ் என்னும் மேனாட்டு அறிஞர் கூறியுள்ளார். இக்கருத்துச் சிலகாலம் சிற்சிலரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் இன்றைய ஆராய்ச்சி களால் இக் கொள்கை வலியுறுகின்றது. 'உலக வரலாற்றுச் சுருக்கம் (Out lines of world History) என்னும் நூலகத்தே அதன் ஆசிரியர் எச்.சி. வெல்ஸ் மேற்கூறிய கருத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

நாவலந் தீவினில் தோன்றிய உயிரினம் ஓரறிவு உயிர், ஈரறிவு உயிர் என்று படிப்படியாக வளர்ந்து குரங்காகிப் பின் மனிதனானான் என்று மனிதன் தோன்றிய விதத்தை சார்லஸ்-டார்வின் The Origin of The species என்ற நூலில் விளக்குகிறார். டார்வின் கூறும் இக்கொள்கையை 'Evolution Theory' என்பர். இக் கொள்கையை திரு. வி.க 'கூர்தல்' அல்லது' உள்ளது சிறத்தல்' என்று கூறுவார்.

இதையே மணிவாசகர் தாம் பாடியருளிய சிவபுராணத்துள்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்று விளக்குகின்றார்.

"................... நாற்றிசை

நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச் ..."

என்ற திருவண்டப் பகுதியையும் ஓர்க. இதன் கருத்து "Every body continues to be in the state of rest or of uniform motion unless an external force acts on it" என்ற நியூட்டனின் முதல் விதியை ஒத்திருந்தது.

**கணித இயல் :-**

பத்துக்கு ஒன்று குறைந்த எண்ணை 'தொன்பது' என்றும், நூற்றுக்குப் பத்து குறைந்த எண்ணைத் 'தொள்நூறு' என்றும், ஆயிரத்துக்கு நூறு குறைந்த எண்ணைத் 'தொள்ளா ஆயிரம்' என்றும் பெயரிட்டிருப்பதே தமிழர் கணக்கியல் ஆராய்ச்சி உணர்வைக் காட்டுகிறது.

"ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீஇப்ப ∴ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே"

என்று நன்னூலார் குறிப்பிடுகிறார். ஆனால் இன்று தொன்பது ஒன்பது என்றும் தொள் நூறு தொண்ணூறு என்றும், தொள் ஆயிரம் தொள்ளாயிரம் என்றும் வழங்கி வருகின்றன.

முழு எண்களேயன்றி பின்னங்களையும் தமிழர்கள் ஆழ்ந்து ஆராய்ந்துள்ளனர். அவை வருமாறு :

| | |
|---|---|
| 1/320 | முந்திரி |
| 1/160 | அரைக்காணி |
| 1/80 | காணி |
| 1/40 | அரைமா |
| 1/20 | ஒருமா |
| 1/10 | இரண்டுமா, இருமா |
| 1/5 | நாலுமா |
| 1/64 | கால்மாகாணி |

| | |
|---|---|
| 1/32 | அரைமாகாணி |
| 1/16 | மாகாணி-வீசம் |
| 1/8 | அரைக்கால் |
| 1/4 | கால் |
| 1/2 | அரை |
| 3/80 | முக்காணி |
| 3/20 | மூணுமா (மும்மா) |
| 3/16 | மும்மா முக்காணி<br>மூன்று வீசம்<br>மும் மாகாணி<br>முண்டாணி |
| 3/4 | முக்கால். |

"சுழி" (zero) என்பது கணக்கியல் உலகத்துக்குத் தமிழனின் கொடை. ஆற்றிலிடும் பொருள்களையும் அளந்து இடவேண்டும் என்பது தமிழர் கொள்கை. எதையும் கணக்கியல் நோக்குக் கொண்டு காண்பது தமிழ்நாடு. முற்காலத் தமிழன் எங்ஙனம் கணக்கியலில் வல்லவனாக இருந்தானோ அதேபோல் தற்காலத் தமிழனும் விளக்குகின்றான். சீனிவாச இராமாநுசம், சிவசூரிய சங்கர நாராயண பிள்ளை இருவரும் இக்கால கணக்கியலறிஞர்களில் முதன்மையானோர்.

**வான நூல் (astronomy) :-**

வானத்தில் நிலவும் ஞாயிறு, திங்கள், விண்மீன், கோள்கள் ஆகியவற்றை ஆராய்ந்து அவை ஒவ்வொன்றிற்கும் இடையே "பரிப்பு" (ஈர்த்து நிற்கும் ஆற்றல்) உண்டென்றும், நிலத்தைச் சூழ்ந்து வானத்தில் இருக்கும் காற்று மண்டிலத்துக்கு அப்பால் காற்று வகையும் பிற எவையும் இல்லாத "வளியிடை "வளியிடை வழங்கா வழக்கரு (Ethereal Region)" நீத்தம் உள-தென்றும் கண்டிருந்தனர்.

"குணதிசை நின்று குடமுதற் செலினும்
குடதிசை நின்று குணமுதற் செலினும்
வடதிசை நின்று தென்வயிற் செலினும்
தென்றிசை நின்று குறுகாது நீடினும்
யாண்டும் நிற்க வெள்ளி," [புறம். 386]

என்ற கோவூர் கிழாரின் பாடற் பகுதியால் கோள் நிலைபற்றிப் பண்டைத் தமிழர் அறிவியல் எல்லை ஒருவாறு தெளியப்படும். வானிலை, கோணிலை ஆயதுறைகளில் அவர் தாமும் நம்மனோர் போன்றே திறமும் தெளிவும் படைத்திருந்தனர்.

"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலை இய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் - - -" (புறம் 30)

என்பதனாலும் அறியலாம்.

சூரியனை ஒரு வாயுப் பிளம்பாகக்கருதுகின்றனர் விஞ்ஞானிகள். இதேப் போன்றே எரிநட்சத்திரங்களும் அவைகள் வானில் ஊர்ந்து செல்லும் போது பிளவுபட்டுச் சிதறுவதால் மக்களுக்கு தீமைதருகின்ற சில வாயுக்களை வெளியிடுகின்றது! என்று இன்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் அன்றைய ஜோதிடர்களும், கணித மேதைகளும் எரி நட்சத்திரம் காண்பது அரசனுக்குப் பேராபத்து என்றனர். அரசனுக்குப் பேராபத்து எப்பொழுது விளையுமென்றால் மக்களுக்குப் பேராபத்து விளையும் காலத்து.

"பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே - உன்றன்
பக்கம் வந்து சேருவேனே வெண்ணிலாவே"

என்றும்

"சந்திர மண்டலத்தைக் கண்டு தெளிவோம்"

என்றும் இந்நூற்றாண்டு கவிஞர்கள் கனவு கண்டனர்.

"வானை யளப்போம் விண்மீனை யளப்போம்'!

என்று பாரதியார் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கூறினார்.

சங்க காலச் சான்றோர்களில் ஒருவராகிய உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்பவரும் கனவு காணும் இயல்பினராகவே

நமது இன்பத் தமிழக வரலாற்றுலகிலே உலவுகிறார். அவர் கண்ட கனவு இன்று நமக்குப் புதுமையாகத் தோன்றி முன்னேற்றத்தைப் பயக்கும் புதியனவான கண்டு பிடிப்புக்-களையும், இலை மறை போல் மறைந்து கிடக்கின்ற காட்சிப் பொருட்களையும் மக்கள் பெற்று அவற்றின் பயனை நுகர்ந்து வளமாக வாழ்பவர்கள் என்பதை அவர் குறிப்பாகக் கண்டார். நமக்கு வியப்பாகத் தோன்றும் பொறிகள் முதலியவற்றை அவர் அவர் உள்ளக் கண்கள் கண்டன. கனவு காண்பவர் எல்லாம் எதிர்கால உண்மை உரைக்கும் ஏந்தல்கள் போலும்.

அன்றே.........

"புலவர் புகழும் புகழுடையார் விசும்பின்
வலவ னேவா வானவூர்தி எய்துப"

என்று செலுத்துவோன் இன்றித் தானே இயங்கும் வானவூர்தியைக் கண்டனர். வலவன் ஏவா வானவூர்தியைக் கண்ட புலவர்கள் இது இக்காலத்தில் இயக்குவோன் இல்லாது இயங்கும் விண்ணியங்கு கப்பலை -(rocket) அன்று கண்டார் நம் புலவர் என்றே கூறலாம்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருள் தன்மை வளப் பெருங்காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழைக் கதிரின் நுன் அணுப் புரைய"

—திருவாசகம்

இன்றைய விஞ்ஞானிகள் சூரியனை மையமாகக் கொண்டு சூரிய குடும்பம் கோள்களுடன் சுற்றி வருகிறது. இப்படிப்பட்ட சூரியன் எத்தனை உளதோ என்று இன்றைய விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்க முடியாதுள்ளது. ஆனால் மாணிக்க வாசகரோ மேற்கண்ட வாறு எட்டாம் நூற்றாண்டளவில் "வீட்டில் ஒரு துவாரத்தின் வழியாகப்படும் சூரிய ஒளிக்கற்றையில் தெரியும் ஆயிரக்கணக் கான தூசிகளுக்கு அண்டப்பகுதியிலுள்ள கோளங்களையும் கோள் களையும் உவமிப்பதோடு அவற்றின் சீரமைப்பும் அழகும் கண்டு வியப்பதற்குரியது என்று விரித்துள்ளார்.

பண்டைத் தமிழரது வானூலறிவு மேற்கண்டவாறு தெளி-வாகிறது.

**இயற்பியல் (Physics) :-**

கலீலியோ தம் வீட்டின் மேல் மாடத்தில் வீற்றிருந்தார். மூக்குக்கண்ணாடியைக் கழற்றித் துடைத்து மடித்து உயர்த்திப் பிடித்துத் தூசு போய் விட்டதா என்று பார்த்தார். தொலைவிலிருந்த கோபுரம் ஒன்று அருகில் வந்து அவர் கண்ணாடியில் அடங்கி நின்றது.

திருக்குறளுக்கு உவமைதேடி நெடுந்தொலைவில் சென்று மெல்லியதொரு புல்லைக்கண்டு, புல்லின் மீது நின்ற தினையினும் சிறிதான பனித்துளியைக் கண்டு, அதில் தொலைவிலுள்ள பனைமரத்தின் தொலைக் காட்சியை நோக்கி மகிழ்ந்த கபிலரை நாம் அறிந்தோமில்லை.

"தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாடா வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி"

— திருவள்ளுவ மாலையின் இப்பாடலை அறிவியற் கண் கொண்டு காண மறந்தோம்.

'ஊசலாடும் பொருள் ஒவ்வொர் ஆட்டத்திற்கும் ஒரே அளவு காலத்தை எடுத்துக் கொள்ளும்' என்பதை இளங்கோ குறிப்பிட்டுக் காட்டுகிறார். 'நீளமான ஊசலை விட நீளம் குறைந்த ஊசல் விரைந்து ஆடும். 'என்னும் உண்மையைச் சிவஞான முனிவர் செப்புகின்றார்.

காற்றினும் கனமான ஊர்திகள் உந்தியெழுந்து காற்றில் உயர்ந்து பறப்பதையும், பின்னர் அவை காற்றில் சறுக்குத் தாழ்ந்து 'கண்டவர் மருள வீழ்ந்து கால்குவித்து இறங்குவதையும் திருத்தக்கத் தேவர் விளக்குகின்றார்.

அறிவியல் - விஞ்ஞானம் - என்றதும் மேல் நாடுகளே நம் எண்ணத்தில் வந்து இடம் பெறுகின்றன. அறிவியலார் (Scientists) என்றாலே அயல் நாட்டறிஞர்களான கலீலியோ, நியூட்டன் போன்றவர்களே நம் கண் முன் வந்து காட்சி தருகின்றனர்.

"மேலை நாடுகளின் தொடர்பு தமிழ் நாட்டில் ஏற்பட்ட பின்பே விஞ்ஞானம் இங்கே தலை காட்டத் தொடங்கியது "என்று பேசு கிறவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். காட்சித் திறனும் ஆராய்ச்சி உள்ளமும் கொண்ட எந்த ஒரு நாட்டிலும் அறிவியல் வளரவே செய்யும் என்னும் உண்மையை ஏனோ இவர்கள் உணர்வதில்லை.

சந்திரசேகர வேங்கடராமன் — சி. வி. இராமன் ஒலி பற்றி யும் ஒளிபற்றியும் விரிவான ஆராய்ச்சி நடத்தினார். ஒலியை அளப்பதற்கு நுட்பமான பல கருவிகளை அமைத்தார்.

கதிரவனின் ஒளிக்கதிர்கள் காற்றின் வழியே நிலத்தை நோக்கி வரும் பொழுது, பன்னிறம் வாய்ந்த அக்கதிர்களுள் வெண்கதிரின் கண் அடங்கியுள்ள பலவகை வண்ணக்கதிர்களும் காற்றின் அணுக்களால் சிதறஅடிக்கப்பட்டுத் தனித்தனியே பிரிக் கப்படுகின்றன. அவ்வக்கதிர்களில் மற்றைக் கதிர்களைவிட மிகுதி யாகப் பிரிக்கப்படும் நீலக்கதிர்களே வானத்திற்கு நீல நிறத்தை யளிப்பனவாகவும், அவ்விதமே கதிரவன்றன் ஒளிக்கதிர்கள் கடல் நீருட் புகுந்து செல்லுங்கால், அக்கடல் நீரில் அணுக்களால் மிகு- தியாகப் பிரிக்கப்படும் நீனிறக் கதிர்களே கடல் நீருக்கு நீல நிறத்தை யளிப்பதாகவும் பல சோதனைகள் மூலம் ஆராய்ந்து கண்டார். இவ்வாறு அணுக்கள் ஒளிக்கதிர்களைச் சிதறவடிக்கும் ஆற்றல்வாய்ந்தவை என்னும் உண்மை முதன்முதலில் சி. வி. இராமனாலேயே வெளியிடப்பட்டது.

அணு :-

அணுவினால் சிறைப்பட்டுக் கிடக்கும் அளவற்ற ஆற்றலினை தமிழன் முன்னரே அறிவான். அதைதான் நினைத்த வண்ணம் அழிவுப் பாதையில் பயன்படுத்துகின்றான். இன்றைய மனிதன்

"சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாம்' என்றார் மாணிக்க வாசகர்.

"அணுவிற் கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்" என்றும் இயம்பினர்.

அன்றைய மக்கள் மிகச்சிறிய உருவம் பொருள் அணு என்று அறிந்திருந்தனர்.

(தொடரும்)

# அருவியின் வரலாறு

(i) மேகக் கூட்டம் மூடியதால் வெண்
மேனி சிலிர்த்த வான் மகளோ
விண்ணும் மண்ணும் தெரியாமல் மிக
விரைந்து மலை மேல் பொழிந்தனளே!

(ii) அருவி யென்றே கொட்டிய நீர்
அழகாய்ப் புகையாய் எழுவது காண்!
நுங்கும் நுரையும் நெளியும் போது
முங்கிக் குளிக்க எவர் போவார்?

(iii) வேகம் அடங்கி அசையுது நெளியுது
விரைவில் நதியாய்ப் பிரியுது பார்!
கால்வாய் என்றே விலகிச் சென்றே
கழனிகள் தோறும் நிறையுது பார்!

(iv) கொட்டிய வேகம் குறைந்ததே
தளர்ந்த நடையும் நண்ணியதே
மெலிந்தே போக நேர்ந்ததே
மேல்கடல் நோக்கி நகர்ந்ததே

(v) பளிங்கு போலத் தெளிந்த நீர்
பார்த்துத் தொட்டால் குளிர்ந்த நீர்
களைத்து வருவோர் பருகும் நீர்
கண்ணில் வந்தால் உவர்ப்பு நீர்!

(vi) அழகிய அருவியும் வயதாகி
ஆற்றல் குறைந்து ஒடுங்கிப் போய்
கடைசிக் காலம் வந்ததனால்
கடலில் கலந்து அடங்கியதே!

(vii) பிறந்தே வளர்ந்து முதுமை கண்டு
இறந்தே போகும் பேருண்மை
யாருக்குத் தான் விதி விலக்காய்
இருக்க இயலும் அருவிப் பெண்ணே!

— பழநி. அரங்கசாமி

# கோவில் திருட்டும் கொலைகளும்

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் ஆலயத்தில் சில நாட்களுக்கு முன்னர் லட்சக்கணக்கில் விலை மதிப்புள்ள கல் நகைகளும், வைரங்களும், தங்கக் காசுமாலைகளும் களவு போன செய்தி பத்திரிகைகளில் வெளியாயிற்று. சென்ற வாரம் உத்தமபாளையம் ஆலயத்தில் இத்தகைய கொள்ளையினை எதிர்த்த கோவிற் பாதுகாவலர் கொலை செய்யப்பட்டுள்ளார். மூணாறு முருகன் கோவிலில் கருவறையில் இருந்த விக்கிரகம் களவாடப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் மன்னார்குடி ராஜகோபாலசாமி ஆலயத்தில் கொள்ளையரை எதிர்த்த அர்ச்சகர் வெட்டிக்கொல்லப் பட்டார். இராமேஸ்வரம் இராமநாதசாமி ஆலயத்தில் இருந்த லட்சுமணரின் வெண்கலச் சிலை திருடப்பட்டுள்ளது. தமிழகத்து ஆலயங்களில் நடக்கும் கொலைகளையும், கொள்ளையினையும் இப்படி பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம்.

தமிழகத்தின் பல்லாயிரக் கணக்கான கிராமப்புறங்களில் இருக்கும் சிறு ஆலயங்களிலிருந்து ஐம்பொன்னால் ஆனதும், செம்பு, பித்தளை, வெண்கலம் ஆகியவற்றால் வார்க்கப்பட்டது-மாகிய கலை நுணுக்கம் வாய்ந்த சிறியதும் பெரியதுமான நூற்றுக்கணக்கான சிலைகள் இரவு நேரங்களில் இடம் பெயர்ந்து கொண்டேயுள்ளன. திருட்டு வெளியாகின்ற சந்தர்ப்பங்களில் மட்டுமே செய்தி வருகிறது. காலங்கடந்து கண்டுபிடிக்கப்பட்டதும் அரிய வேலைப்பாடுகள் நிறைந்ததும், வரலாற்றுப் புகழ் வாய்ந்-ததும் ஆகிய சிவபுரம் நடராசர் சிலை அண்மையில் தான் இந்திய மண்ணை எட்டிப் பார்த்துள்ளது. இறைமை உணர்வினைக் குலைப்பதுவும், கலாச்சாரத்தை விற்பதுமாகிய இச்செயல்களைத் தடுப்பது எப்படி? இன்றைய நிலையில் இத்திருட்டுகளைச் செய்வோர் சிற்சில ஆண்டுகள் சிறைத்தண்டனையோடு தப்பித்துக் கொள்கின்றனர். சட்டத்தைத் திருத்தி தண்டனையைக் கடுமை-யாக்கினாலொழிய இதற்குத் தீர்வு கிடையாது. மரண பயம் ஒன்றினாலே தான் மக்கட் கூட்டத்தின் விரும்பத்தகாத செயல்-களைக் கட்டுப்படுத்த முடியும். இந்நாட்டின் தொன்மை, கலாச்-சாரம், ஆன்மீக உணர்வு ஆகியவற்றைக் காப்பாற்ற வேண்டும் என்னும் அக்கறை அரசினருக்கு உண்மையிலேயே இருக்குமானால் தேவையான அளவு சட்டத்தைத் திருத்தி சமயச் சொத்துகளைக் காப்பாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

# புதுக்கவிதையும் மரபுக்கவிதையும்

டாக்டர். கு. அழகேசன்

பாரதி காலத்திற்குப் பிறகுக் கவிதைக்குக் கருத்துச் சுதந்திரம் உயிராய்க் கொள்ளப்பட்டது. கவிதையின் வாழ்வு, சந்தங்களில் அடங்கி விடாமல் மக்களேற்கும் எளிமையான சொற்களில் அடைக்கலம் ஆனது.

சில ஆயிரம் ஆண்டுகட்கு முன் யாக்கப்பட்ட 'பட்டினப்பாலை' யின் பல நூறு அடிகளிலும்

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரேன் வாரிருங்கூந்தல் வயங்கிழை ஒழிய

என்று வரும் சொல்லுருவங்களே மனதிற் பதிந்த செஞ்சொற் சித்திரங்களாகக் கருதப்படுகின்றன. புதுக் கவிதையிலும் எழுதப் படும் அனைத்தும் இல்லாவிடினும் சிற்சில ரசனைவரிகளே நெஞ்சின் வரிகளாக நிலைத்துள்ளன.

புரியாச் சொல், அளவுக்கு மீறிய வருணனை ஆகியன காவியத்திலும் இடம் பெறக் கூடாது. கால்பக்கக் கவிதையிலும் புகக் கூடாது என்னும் கொள்கையினால் பண்டித சிகாமணிகள் மட்டுமே புரிந்து பாராட்டும் கவித்தன்மை சற்று மாறிப்போனது.

(i) 'என் மனைவி ஒர் புதுக் கவிதை; காரணம்
சீரில்லாமல் வந்தவள்'

(ii) 'இராமர் தடவி அணில் கோடு பெற்றதேல்
சீதையை
இராமன் தொட்டதே இல்லையா'

(iii) 'என் மனைவி கண்ணகியாய்
இருக்க வேண்டும்; காரணம் எனக்கொரு
மாதவி தேவைப்படுகிறாள்'

—என்பன போன்ற சிந்தனையைத்

தூண்டும் பரபரப்புக் கவிதைகள் பார்ப்போர் கண்களில் மின்ன-

லடித்தன. ஆகவே, பழம் பொன்னில் புதுமெருகேற்றிப் பட்டைத் தீட்டினாற்போல் இதுபோன்ற புதுக்கவிதைத் துணுக்குகள் பிரகாசங்கொண்டுள்ளன. ஆனால், அதே தருணத்தில் மரபுக் கவிதையும் புதுக் கவிதையும் தண்டவாளத் திசைபோல் எதிரெதிர் இருந்த போதிலும் தடம் மாறாமல் இணைந்தே சென்றன.

கலித் தொகைக் காட்சியின் கருத்தமைதியை நோக்கும் போது இக் கருத்தின் உண்மையும் நியாயமும் உறுதிப்படும். அந்நூலின் வரும் ஒரு தலைவன் வீதி வழியே வருந்தலைவியைக் காண நேரிட்டான். மறுகணம் ஒரு கவிதை பிறந்தது. காண நேரிட்ட வேதனையினையும் கவிதை பிறந்த வேகத்தினையும் இனிக் காண்போம்.

நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப் போதரவிட்ட
நுமருந் தவறிலர் நிறையழி கொல்யானை
நீர்க்கு விட்டாங்கு பறையறைந்து செல்லற்க என்னா
இறையே தவறுடையான்.

— என்று கூறி அக்காவிய நாயகன்

கலங்கினன். 'கண்டதால் என் மீது தவறில்லை; காண நேரிட்டமைக்கு வழிவகுத்த இறையே அனைத்திற்கும் காரணகர்த்தா. இதுவே அவனின் உள்மன ஓலம். இன்றைய கவிதை உலகில் அறிமுகமான கவிஞர் மேத்தாவின் பார்வையும் இதே பாதையில் தான் பரிணமிக்கிறது.

முக மூடிக் கொள்ளைக்காரர்களைப் பிடித்து விட்டோம்
இந்த
முகமூடாத கொள்ளைக் காரிகளிடம் பிடிபட்டோம்.
முற்றுகையிட்ட பகைவர்களின் முரசுகளையெல்லாம் தூள் தூளாக்கியவன்
தோற்றுப்போனது வளையோசை வளைத்துக் கொண்ட போதுதான்.
கப்பல்களையே கவிழ்த்துவிடக் கூடிய அந்தக் கண்களில்
ஆண்களனுப்பும்
காகித ஓடங்களா கரைசேரப் போகிறது.
அரசாங்கம்
அடுத்த ஆண்டாவது அறிவிக்க வேண்டும்
'அழகிகள் ஜாக்கிரதை' என்று.

மேற்காட்டிய இரண்டு பாடல்களும் ஒரே கருத்தினை வலியுறுத்திய

போதிலும் வார்த்தை ஜாலங்கள் வேறுபட்டு நின்று சொற்களின் சுருதிகளுக்கு அழகூட்டுமாறு அமைந் துள்ளன.

தன் தவறுக்குக் காரணத்தைப் பிறர் மீது சுமத்தினாலும் காதற்குற்றங்களுக்கு மட்டும் இறைவனை அல்லது அரசனை இழுத்து வைத்துப் பேசுவதில் முற்காலத் தொடங்கி இன்றை நாள் வரை இதயக்களிப்பு இருக்கத்தான் செய்கிறது. அவ்வாறு இல்லை யென்றால் தன் மனங்கலந்தாளுக்கு எழுதும் கடிதத்தில்

உனக்கு நான் எழுதிய கடிதங்கள்
பிரித்துப் பார்க்காமலேயே
குப்பைத் தொட்டியில்
போடப்பட்டன
நீ என்ன
அரசாங்கமா

— என்ற வரிகள்

விரசங்கலவாத வேதனையாய் வடிவம் பெறுமா? இக் கவிதையில் ‘தன் வேதனை தரணியாகும் அரசின் மீது சுமத்தும் தலைவனைக் காண்கிறோம். கவியரசு கண்ணதாசனின் சினிமாக் கவிதையில் இந்த ரகசியம் புதைந்து போயுள்ளது,

கண்களின் தண்டனை காட்சியின் வழி
காட்சியின் தண்டனை காதல் வழி
காதலின் தண்டனை கடவுள் வழி
கடவுளைத் தண்டிக்க என்ன வழி?

இக் கவிதை வரிகளில் காட்சித் தவறுக்கென்று சாட்சிக் கூண்டில் இறைவன் ஏற்றப்படுகிறான். நகர்வலம் வருகின்ற பெண்ணின் காட்சி வருணனையை விளக்க வந்த கவிஞர்களெல்லாம் நகராகும் அரசுமீது குற்றப்பத்திரிக்கை அளிக்காமல் இருந்ததில்லை. இவ் வாறெல்லாம் சிலர் குற்றம் சாட்டினதால்தான் அரசபதவி என்பது ‘துன்பப் அல்லது தொழுதவன்று ‘என அரசன் இளங்கோவன் சிலம்பில் புலம்பினான். மேலும்

மழைவளங் கரப்பின் வான் பேரச்சம்
பிழை உயிர் எய்தின் பெரும் பேரச்சம்

என்றெல்லாம் இளங்கோ கூறுவதின் பொருண்மையும் இது பற்றியே எனலாம்.

## வருந்துகிறோம்

தொண்ணூறு வயதைத் தாண்டிய வழக்கறிஞர் பெ. நா. அப்புசாமி அவர்களைத் தமிழுலகம் நன்கு அறியும். சென்னையில் (15-5-86) காலமான அவர் அறிவியலைப் பழகு தமிழில் கொண்டு வந்து பத்திரிகைகளின் வழியாகப் பரப்புவதில் கரை கடந்த ஆர்வம் காட்டியவர். சென்னைப் பல்கலைக் கழகத்து அகராதிக் குழுவின் தலைவராக வையாபுரிப் பிள்ளையை அமர்த்த வேண்டும் என்று ஆட்சிக் குழுவினரையே 1926-இல் தீர்மானம் போடச் செய்த பெருமை இவரைச்சாரும். அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அறிவியல் தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட இவரைச் சில ஆண்டுகளுக்கு முன் 'தமிழ்ச் செம்மல்' என்னும் பட்டம் அளித்து மதுரைப் பல்கலைக் கழகம் பாராட்டியுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் (23-12-85) நிகழ்ந்த தேசீய ஒருமைப்பாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும் அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

## தமிழ்ப் பேராசிரியர் மறைவு

பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் (1902 - 1986) சிலகாலம் நோய்வாய்ப்பட்டு அண்மையில் தமது 84-ஆம் வயதில் சென்னையில் காலமானார் எனும் செய்தி தமிழன்பர்கட்குப் பேரதிர்ச்சி தருவதாகும். பெருமிதமான தோற்றமும், பீடு நடையும் கொண்ட பேராசிரியர் மதுரைத் தியாகராயர் கல்லூரியில் பதினேழு ஆண்டுகள் பணியாற்றியவர். ஓய்வு பெற்றுச் சென்னைக்குத் திரும்பி, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்திலும், எழுத்துச் சீர்திருத்தக் குழுவிலும் உறுப்பினராக இருந்து அரிய ஆலோசனைகளை ஈந்தவர். 1981-இல் தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தால் திரு.வி.க விருதும் பத்தாயிரம் வெண்பொற்காசுகளும் பரிசாக வழங்கப் பெற்றவர். தமிழக அரசால் 'திருக்குறள் தோன்றல்' என்னும் பட்டம் அளிக்கப்பெற்றவர். அவரது படைப்புகளுள் மதுரை நாயக்கர் வரலாறு, நல்ல தமிழ் எழுத வேண்டுமா எனும் நூல்கள் குறிப்பிடத்தக்கவை. ஆங்கிலக் கவிஞன் மில்டனின் 'கோமஸ்' எனும் குறுநாடகத்தைத் தமிழில் பெயர்த்துள்ளார். பேராசிரியரின் 'எங்கள் தோட்டம்' எனும் சிறுவர் பாடல்கள் மத்திய அரசின் பரிசு பெற்றதாகும்.

பேராசிரியரின் மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும் குறிப்பாக அவரது ஒரு புதல்வர் சோமசுந்தரம் அவர்கட்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரியன.

ஆசிரியர்

# இனியும் சுணங்கேல்

—ஈழவன்

(கட்டளைக் கலித்துறை)

கூட்டில் அடையுண்ட ஈழப் பசுங்கிளி குற்றுயிராய்
நாட்டில் சுதந்திர மாகப் பறந்திடும் நாளைஎண்ணி
ஏட்டில் எழுதவும் ஏலாத வண்ணம் எழுப்பும்குரல்
கேட்டும் கிளரா திருப்பார் மனுத்தன்மை கெட்டவரே!

கீதைப் பெரும்புகழ் ஓயாது உரைத்திடும் பாரதமே
கீதை பிறந்த இடத்தை மறந்து கிளர்ச்சியின்றி
வாயில் கவலைகள் வண்டிக் கணக்கிலே விண்டுரைத்தால்
நோயின் அவத்தை நொடிந்திடுமோ நவ பாரதமே!

வயலில் வியர்வை பிழியும் உழவன் படுகொலையும்
வரம்பில் உணவு வழங்கும் தமிழச்சி கற்பழிப்பும்
அனலில் எரியும் குழந்தை அலறும் அவலங்களும்
மனசில் உனக்குப் போர்க்குண மாண்பை மலர்த்தலையோ?

வயலில் வரம்பில் தெருக்களில் திண்ணையில் கோயிலினில்
திரியும் நாய்களும் எரியும் பிணங்களும் தெரியுது பார்!
நரியும் பிணந்தின்னும் நாய்களும் கூகையும் ஓலமிட்டுத்
திரியும் மயான வெளிஎன ஈழம் தெரிகிறதே!

ஈழத் துருபதை ஓலம் இடும்குரல் இந்தியாஉன்
ஈரச்செயலில் விழவிலையோ? என்னே பரிதாபம்!
சூழும் திறமையும் சூழ்ச்சியும் மிக்கவன் கண்ணனைப்போல்
பாலும் நவதுரி யோதனர்க்கோர் பாடம் புகட்டாயோ?

அழவும் முடியலை, ஐயோ அரற்றவும் ஏலுதில்லை
பழகு தமிழின் அமுதச் சுவையுண்ட பாவம் இதோ?
இழவும் இழப்பும்ஆ; ஈழத் தமிழன் தலைவிதியோ?
இளகா இயல்புநம் இந்திய நர்ட்டின் இருதயமோ?

நாசிப் படுகொலை எந்தொரு மூலைக்கு இணையாகுமோ?
தேசம் அனைத்திலும் சிங்கள ராணுவத் தீயர்களின்
நாசச் செயல்கள் நரபலி எங்கும் நடந்ததில்லை!
பாசம் மிகுத்திடும் பாரதமே நீ பதுங்குவதோ?

உள்விவ காரம் எனஒர் பலூனை மிதக்கவிட்டு
மெள்ள நழுவ முயன்றிடும் மேதைமை ஏதமையே!
எல்லை கடந்து மனித உயிர்களைக் கொன்றழித்து
அல்லற் படுத்தும் அடங்கா அரசுடன் நட்புறவோ?

மோட்டு மிராண்டிகள் ஏழைத் தமிழ் மக்கள் மீதுகுண்டு
போட்டு நரபலி கொள்ளும கொடூரத்தை இவ்வுலகில்
வேட்டுவச் சாதியும் கேட்டுவிட்டுச் சும்மா இருக்காதே!
நாட்டில் பழம்பெரு நாடிதனைக் கண்டு நசிவதுவோ?

தமிழகமே ஈழம் நொந்து துடிக்கும் தவிப்பில்உயிர்
அமுதக் கரங்களை நீட்டி அணைத்திடும் தாயகமே!
இனியும் சுணங்கேல்! இருந்தது தெரியாது அழிந்திடுவோம்
வினையின் திறத்தால் விடுதலை தந்திடும் வீறடையே

# கடல் கடந்த கண்ணன்

(தொடர் கட்டுரை)

பி.ஆர்.ஸ்வாமி

கார்முகில் வண்ணன் அநாதி காலத்தில் பிறந்து, தவழ்ந்து, தளர் நடையிட்டு வளர்ந்து மாயக்கண்ணனாகிக் குழலூதி மக்களையும் மாக்களையும் கவர்ந்த இடமல்லவா பிருந்தாவனம்! ஆயிரக்கணக் கான வீடுகளிலும், தெருக்களிலும், சந்து பொந்துகளிலும் கண்ணனது உருவத்தை வைத்தன்றோ பூஜை புரிந்து வருகிறார் கள்! கண்ணனுக்கே ஆட்பட்டுக் கிடந்த ஆபேசரனுக்கு இந்தப் பிருந்தாவன வாழ்க்கை உளமாரப் பிடித்திருந்தது. ஆபேசரன் தங்கியிருந்த ஒரு வீட்டின் மாடியிலிருந்து சாளரத்தைத் திறந்து வெளியில் பார்த்தால் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் யமுனை நதி கடல் போலத் தோற்றம் அளிக்கும்.

> 'உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம்
> கண்ணன் எம்பிரானே என்று கண்ணில் நீர் மல்கி'

எனும் ஆழ்வாரின் திருவாக்கினையொத்து, ஆபேசரனுக்கு அழகிய பிருந்தாவன நகரமும், யமுனை நதியும் தண்ணிய நீர்ப்பெருக்கும் கண்ணபிரானின் பல்வேறு தோற்றங்களாகவே காட்சி அளித்தன. 'என்னுடைய உள்ளத்தில் இரண்டறக்கலந்து விட்ட கண்ணனின் புகழை இந்த உலகம் உணரவில்லையே' என்னும் ஏக்க உணர்வு அவரை விட்டகன்றபாடில்லை. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' 'என்ற நல்ல எண்ணம் தலைதூக்கி நின்றது.

கொஞ்ச காலம் பொருளாதார நெருக்கடியால் தடைப்பட் டிருந்த அந்த ஆங்கில இதழை (Back to Godhead) மீண்டும் வெளி-யிட்டு இறையுணர்வினைப் பரப்ப எண்ணம் கொண்டார் பிரபு பாதர். அச்சடிப்பு, தபாலில் அனுப்புதல் ஆகிய அனைத்துப் பணி களையும் முன்னமேயே டில்லியிருந்தல்லவா செய்து கொண்டிருந்-தார்! பிருந்தாவனத்திற்குக் குடியேறிய பிறகு அன்றாடம், ரயில் பயணம் செய்து டில்லிக்குப் போய் வர வேண்டியிருந்தது. எளிய வாழ்க்கையினை நாடி பிருந்தாவனத்துக்கு வந்திருந்தாலும், பயணச் செலவு, சாப்பாட்டுச் செலவு என்று செலவினங்கள் அதிக-ரித்துக் கொண்டேயிருந்தன. மிகுந்த பண நெருக்கடிக்கிடையில் அந்த ஆங்கில இதழினை மீண்டும் ஏறத்தாழ ஆறு மாத காலம் வெளியிட்டார். 'அனைத்துக்கணக்குகளையும் முடித்துப்பணத்தைக்

கொடுத்தாலொழிய இதழை அச்சிட மாட்டேன்' என்று சொல்லி விட்டது அச்சகம். அச்சுப்பணி நின்று விட்டது. இதழ் வெளி வரவில்லை. போனால் போகட்டுமே! ஆபேசரனின் எழுதும் பணியை யார் தடுக்க முடியும்? ஆன்மீக உலகத்தினை எத்தகைய கருத்தும் காட்சியும் வழிப்படுத்த முடியும் என்று அவர் எண்ணினாரோ, அந்த முறைப்படி கட்டுரைகளையும் கவிதைகளையும் குறிப்புகளையும் எழுதிக் கொண்டேயிருந்தார். ஓயாது, ஒழியாது இந்த எழுதும் பணி மட்டும் தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தது.

எந்தவிதக் கவலையோ, சலனமோ இல்லாத ஒரு நாள் சிறிய துண்டுக் காகிதத்தை எடுத்து வங்காள மொழியில் ஒரு கவிதையை அடித்தல் திருத்தல் இல்லாமல் கீழ்வருமாறு எழுதினார். இல்லறத்தைத் துறந்து ஏகாந்தனாகியது, ஏன் என்னும் வினாவிற்கு அந்தச்சிறு கவிதை ஒரு விடையாக அமைந்திருந்தது.

இல்லாளும் என் மக்களுமிச் சந்ததியும் அனைத்துமெல்லாம்
அல்லேன் எனத்துறந்து அடியனாய் வந்ததேனோ?
வெட்ட வெளிச்சுகத்தை வேணமட்டும் உண்பித்த
கண்ணணே! உன் கமலச் செங்கண்
கடைக் கண்ணே கைகொடுக்கும் என்றுகண்டேன்.
பார்க்கும் பொருளனைத்தும் நீயே யன்றி
பரம் பொருளே வேறெதுவும் கண்டேனில்லை!
கட்டிய பெண்டும் கனிவுறு மக்களும்
பெட்டகம் காலி என்று தெரிந்ததும்
எட்டிப் பார்த்திலர். ஏனென்று கேட்டிலர்!
பெற்றவர் எங்கே! மற்றவர் எங்கே!
பேணிய சுற்றம் போனது எங்கே!
தங்கியிருப்பது வெறும் பெயரன்றோ!
தாரணி தன்னின் நிலைபொருள் நீயே!

ஒரு நாள் இரவு. பிரபுபாதர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது கனவொன்று கண்டார். அவரது குருநாதராகிய பக்தி சித்தாந்தரே உயரமாக, நிமிர்ந்த நடையோடு, காவியுடை உடுத்துவிண்ணிலிருந்து மண்ணை நோக்கி வந்து அருகில் நின்றார். பிரபுபாதரை அழைக்கிறார். என்னைத் தொடர்ந்துவா என்று மீண்டும் மீண்டும் சைகை காட்டி 'சன்னியாசம் கொள்' என்று

ஆணையிடுகிறார். உயிருடன் இருந்த காலத்திலேயே மடத்து நிர்வாகத்தை எடுத்துக் கண்ணனின் புகழை உலகெங்கும் பரப்ப வேண்டும்' என்று அவர் ஆணையிட்டது பிரபுபாதருக்கு நினைவில் வந்தது. துறவு மேற் கொண்டாலும் இப்பொழுது செய்து கொண்டிருக்கும் இறைபணியைத் தானே செய்யப் போகிறோம்' என்ற எண்ணம் ஏற்பட்டது. இருப்பினும் தோற்றத்தினும் துறவி யாக இருப்பதனாலே பிறருக்கும் வழிகாட்டியாக இருக்கலாம் என்ற உணர்வும் வலுப்பட்டது. ஐம்பது வயதுக்கு மேற்பட்டுத் துறவுபூணுவதைத்தான் வேதகால நெறியும் ஒத்துக்கொள்ளுகிறது. ஆன்மீக நெறியினை ஏற்றுக்கொண்ட சன்னியாசிகள் எல்லாம் காவியுடை தரிப்பதே மரபெனக்கொண்டுள்ளனர். எனவே கனவில் பெற்ற ஆணையை செயலாக்குவதே வழி என்று முடிவு செய்தார் பிரபுபாதர்.

'மக்களொடு மகிழ்ந்து மனையறங்காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழி
தலைவனும் தலைவியும் தம் பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறம் காண்ப'

என்னும் தொல்காப்பிய நெறியும் அது தானே! பிரபுபாதர் மதுராவில் இருந்த கேசவ மகராஜ் எனும் முதிய சந்நியாசியிடம் ஆலோசனை கேட்டார். "கண்ணன் நாமத்தை உச்சரித்து உலகமுழுவதும் ஆன்மீகத் தொண்டுபுரிய எண்ணும் உனக்குக் காவியுடையே பொருத்தமானது. துவராடைத் தோற்றமே உன்னைச் சாதாரண மக்களின்றும் வேறுபடுத்திக் காட்டும் தன்மையது. ஐம்பது வயதைக் கடந்த நிலையில் தூய துவராடை உனது தொண்டுக்குப் பெருமை சேர்க்கும்" என்று அம்முதியவர் ஒரு சொற்பொழிவே செய்து விட்டார்.

பிருந்தாவனத்தில் முறையான சந்நியாச சடங்குகளை நடத்தி பெற்றோர் இட்ட பிரபுபாதர் என்றும் பெயரையும் துறந்து சரணாரவிந்த பக்தி வேதாந்தசாமி என்று புதுப் பெயர் பூண்டார். ஆன்மீகப் பிரச்சாரத்தையோ அதுவரை நடத்திய ஆங்கில இதழினையோ இந்த உலகம் எதிர்பார்த்தவாறு ஏற்றுக் கொள்ளவில்லை. அங்குமிங்கும் கேட்போர் சிலர் இருந்தாலும், உரையாடலோ, சொற்பொழிவோ காற்றோடு போய் விடுகிறது. ஆங்கில இதழினைப்படிப்போரும் அதனை வைத்துப் பாதுகாக்கும் எண்-

ணம் உடையோராகத் தெரியவில்லை. இந்நிலையில் ஆங்கிலத்தில் நூல் எழுதி வெளியிடுவதே பொருத்தமாகப் பட்டது. நூலக நண்பர் ஒருவரும், ஒய்வு பெற்ற ராணுவ அதிகாரியும் இக்கருத்தினையே வலியுறுத்தி வந்தனர். மேலைநாட்டு மக்களிடைக் கண்ணன் புகழ் பேசும் காப்பியங்களைப் பரப்புதலே பொருத்தம் என்று கருதினார் பிரபுபாதர்.

வைணவ நீதி நூல்களுள் தலை சிறந்தது பாகவதம். கீதையைப் போல சுருக்கமாக இல்லாமல், பன்னிரு காண்டங்களில் பதினெட்டாயிரம் சுலோகங்களைக் கொண்டது. பக்தி சித்தாந்தரும், பக்தி வினோதரும் வடமொழியின் பாகவதத்துக்கு வங்க மொழியில் விளக்க உரை எழுதி உள்ளனர். காலம் காலமாக வைணவர்கள் போற்றும் இந்த நீதி நூலை ஆங்கிலத்தில் எழுதி உலகத்தோர் உணரச் செய்ய வேண்டும் என்று எண்ணினார் பிரபுபாதர். மீண்டும் டில்லிக்கு வந்து நண்பர் ஒருவரின் உதவியோடு சாந்தினி சவுக் பகுதியில் ராதாகிருஷ்ண ஆலயத்தில் தங்குவதற்கேற்ற ஒரு சிறு அறையினை ஏற்பாடு செய்து கொண்டார். பாகவத புராணத்தின் ஆங்கில மொழியாக்கமும் விளக்கமும் இங்கு தான் உருவாகத் தொடங்கின. ஏராளமான நூல்கள் வெளியாகும் ஆங்கில, அமெரிக்க நாடுகளில் மனித குலத்து ஆன்மீகப் பசியினைப் போக்கும் அருள் நூல்களுக்குப் பஞ்சம். அந்தக்குறையினை இப்பாகவதம் போக்கும்-போக்க வேண்டும் என்று எண்ணினார் பிரபுபாதர். பன்னிரண்டு பாகங்கள் கொண்ட இப்பாகவத்தை எழுதி, அழகாக அச்சிடுவதோடன்றி வெளிநாட்டுக்கும் தானே எடுத்துச் சென்று இலவசமாகவே வழங்க வேண்டும் என்பதே பிரபுபாதரின் தணியாத ஆர்வமாக இருந்தது.

வியாச முனிவரின் மூல நூலுக்கு முரண்பாடின்றி வியாக்யானங்களை எழுதவேண்டும். புதுமையான விளக்கம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு பாரம்பரிய அணுகு முறைக்கு மாறான முறையில் தனது கருத்தை வலிந்து புகுத்தும் அபத்தம் செய்யாமல் பாகவத விளக்கம் அமைய வேண்டும் என்பதில் அவர் ஆர்வம் காட்டினார். ஆங்கில விளக்கங்களைத் தானே எழுதி ஒரு முறை படித்து, தேவையான திருத்தங்களையும், செய்வார். பழைய மாடல் தட்டச்சுப்பொறி ஒன்றில் அச்சிடுவார்.

மெல்லிய பாய் ஒன்றில் தரையில் அமர்ந்து கொண்டு இந்தப்பணிகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டேயிருப்பார். ஏற்றுக் கொண்டுள்ள பணியோ மிக நீண்டது. வயதோ அறுபத்து ஏழுக்கு மேல் ஆகிவிட்டது. எனவேதான் காலத்தோடு போட்டி போட்டுக் கடமையினைச் செய்து கொண்டிருந்தார். தானே உணவை பொங்கிக் கொள்வார். இருப்பினும் உணவும் உறக்கமும் ஓரளவே. பாகவதத்தை ஆங்கிலத்தில் வெளிக் கொணர்ந்தேயாக வேண்டும் எனும் பேராவலின் விளைவே அவரது கடுமையான உழைப்பு.

ராதாகிருஷ்ண ஆலயத்தில் கருவறைக்கு அருகில் தொடங்கிய பக்தி இலக்கியப்பணி பிரபுபாதருக்கு இறைபணியாகவே தோன்றிற்று. கிருஷ்ண கானத்தைக் கேட்டறியாத மொழி பெயர் தேயத்திலும் அவன் புகழ் பரவ வேண்டும். எனினும் ஆங்கிலப் பெயர்ப்பும் அதன் விளக்கமும் அச்சிலேற்றப்பட்டு புத்தக உருவில் வர வேண்டுமே! நன்கொடை இல்லாமல் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த முடியாதே! இந்நிலையில் கோரக்பூரிலுள்ள அனுமான் பிரசாத் நான்காயிரம் ரூபாய் கொடுக்க முன் வந்தார். இதனைக் கொண்டு பாகவதத்தின் முதல் பாகத்தினை எப்படியும் வெளிக் கொணர்ந்து விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

1962-இல் இவ்வாறு தொடங்கிய முதற்பாகம் அச்சடிப்புப் பணி சில மாதங்களுக்குள் நிறைவுற்றது. டாக்டர்.ராதாகிருஷ்ணன் போன்றோர் நூலின் தரத்தை வெகுவாகப் பாரட்டினர். அடையாறு நூலக இதழும் மொழிப் பெயர்ப்பாளரின் ஆய்வுத்திறமையினைப் போற்றியது. உத்திரப்பிரேதேச ஆளுநராக இருந்த டாக்டர் பிஸ்வநாத் தாஸ், இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் ஜாகிர் ஹீசைன் ஆகியோரும் தனிப்பட்ட முறையில் நூலினைப் பற்றி வாழ்த்துக் கடிதங்கள் எழுதியிருந்தனர். இந்தியப்பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியிடம் ஒருநாள் காலையில் அவரது அலுவலகத்துக்குச்' சென்று ஸ்ரீமத் பாகவதம் -முதற் பாகத்தை அன்பளிப்பாகக் கொடுத்து வந்தார் பிரபுபாதர். அரசினர் நூலகங்களில் இந்நூல் வைக்கப்பெறும் தகுதியுடையதென்று கூறி இதனை வெளியிட்டதனைப் பாராட்டி பிரதமரே கையொப்பமிட்ட ஒரு பதில் கடிதம் சில நாட்களில் வந்தது.

நண்பர்கள், பெரியோர்களின் வாழ்த்துரைகள் பிரபு பாதருக்கு ஊக்கத்தை அளித்தன. பல்வேறு நிறுவனங்களும் தனிப் பட்டோரும் அளித்த ஆக்கத்தைக் கொண்டு ஈராண்டு காலத்திற்

குள் மூன்றாவது பாகம் வரை பாகவத மொழி பெயர்ப்பை அச்சிட்டு விட்டார். நூல் எழுதுவதோடு அச்சிடும் பேப்பர் வாங்கு-வது, புருப் பார்ப்பது ஆகிய பணிகளையும் தானே செய்து, பண நெருக்கடியினையும் சமாளித்து பாகவத நூலின் கெட்டி அட்டை போட்ட மூன்றாம் பாகம் வெளி வரும் போது பிரபுபாதருக்கு வயது 69. தனது குருவாகிய பக்தி சித்தாந்தர் விடுத்த ஆணையைச் சிறுகச்சிறுக செயலாக்கி வரினும் கிருஷ்ணாய இயக்கத்தினை அமெரிக்கா போன்ற மேலை நாட்டிலும் பரப்ப வேண்டும் என்னும் விழைவு மனத்தை விட்டு அகன்றிலது''. குடும்பச் சுமையும் இல்லை. கண்ணனின் வரலாறு கூறும் பாகவதத்தின் மூன்று பாகங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. அதனை வெளிநாடு சென்று பிரச்சாரம் செய்ய நானும் ஆயத்தமாக இருக்கிறேன். ஆயினும் அமெரிக்காவிற்குச் செல்லவும், தங்கவும், திரும்பி வரவும் பணம் வேண்டுமே!— சிந்தனை இப்படி ஓடிற்று.

பிருந்தாவனத்தில் இறைபணி செய்து கொண்டிருக்கும் காலங்களில் தன்பால் அக்கறை கொண்டவர் யாராக இருந்தாலும், அமெரிக்கா செல்லும் தனது விருப்பத்தைச் சொல்லுவது பிரபு-பாதரின் வழக்கம். மதுராவிலிருந்து வந்திருந்த அகர்வால் எனும் தொழிலதிபரிடமும் அப்படித்தான்சொன்னார்.அவரும் மற்றவரைப் போல் 'சரி' என்று சொல்லியதோடன்றி, பென்சில்வேனியாவில் இருக்கும் தன் மகனுக்கு எழுதி அமெரிக்காவில் பிரபுபாதருக்கு ஆகும் செலவை ஏற்றுக் கொள்ளச் சொல்வதாகவும், உறுதியளித்-தார். இந்த நிகழ்ச்சி நடந்து சில மாதங்கள் ஆகி விட்டன. எப்போதும் போல் பிருந்தாவனத்துக்கும் டில்லிக்குமாகப் பயணம் செய்து கொண்டிருந்தார் பிரபுபாதர். எழுத்துப்பணி, அச்சடிப்பு வேலைகள் துரிதமாகவும் நூல் விற்பனையோ மந்த கதியிலும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன.

இந்திய அரசின் வெளிநாட்டு அமைச்சகத்திடமிருந்து சற்றும் எதிர்பாராத நிலையில் ஒருநாள் பிரபுபாதருக்கு ஒரு தபால் வந்தது. 'பென்சில்வேனியாவில் இருக்கும் கோபால் அகர்வால் உமக்கு அமெரிக்காவில் ஆகும் செலவை ஏற்றுக் கொள்வதாக உறுதி அளித்திருப்பதனால், நீவிர் அமெரிக்கா போவதில் தடையேதுமில்லை',. என்பதுவே அந்தத்தபாலில் வந்த செய்தி. மொழி பெயர் தேயம் செல்லும் விழைவு மீண்டும் தலை தூக்கி விட்டது இருந்தாலும் அமெரிக்கா வரை செல்லும் பயணச் செலவுக்கு என்ன செய்வது?

பாகவதம் இரண்டாம் பகுதியினை அச்சிட்டு வெளியிடும் செலவை முழுதுமாக ஏற்றுக் கொண்ட சுமதி மொரார்ஜி என்னும் அம்மையாரின் நினைவு வந்தது. பம்பாய்க்குப் பயணமானார் பிரபுபாதர். செல்வ வளம் மிகுந்த சுமதி மொரார்ஜி ஸிந்தியா கப்பல் கம்பெனியின் பங்குதாரர். அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கு அவரது சரக்குக் கப்பல்கள் சென்று வருவது சாதாரண நிகழ்ச்சி. அந்த அம்மையாரின் செயலாளர் மூலம் தனது வேண்டுகோளை அனுப்பினார் பிரபுபாதர். "தள்ளாத வயதில் நெடும்பயணம் கூடாது. இங்கிருந்தே பாகவத வெளியீடு முழுவதையும் கவனிக்கச் சொல்" என்பதே பதில். பிரபுபாதர் மனம் தளரவில்லை. சுமதி அம்மையாரை நேரில் பார்க்கும் அனுமதி வாங்கினார். "தளர்ந்த வயதில் நெடும்பயணம் சென்றால் உயிருக்கே ஆபத்து வரலாம் என்று சொல்கிறார்கள். மீண்டும் ஏன் வற்புறுத்துகிறீர்கள்?" என்றார் அந்த அம்மையார். அதனைப் பிரபுபாதர் காதிலே வாங்கிக் கொண்டாரோ இல்லையோ, தலையினை ஆட்டியும் கையினை அசைத்தும் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியமையான், சுமதி அம்மையார் "சரி! சரி! கல்கத்தாவிலிருந்து புறப்படும் கப்பலில் ஒரு பயணச் சீட்டிற்கு ஏற்பாடு செய்து விடு" என்று அலுவலரிடம் ஆணையிட்டு விட்டார்.

நெடுநாளைய கனவு நனவாகி விட்ட மகிழ்ச்சியில் வெளி வந்தார் பிரபுபாதர். சுமதி மொரார்ஜியின் செயலாளர் பிரபுபாதருக்கு வேண்டிய சிற்சில கம்பளி உடைகளையும், பாகவதம் பற்றிய விளம்பரத் தாள்களை அச்சடித்தும் வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்து கொடுத்தார். கல்கத்தாவிலிருந்து புறப்படும் ஜலதூதா கப்பலின் கேப்டன் அருண் பாண்டே என்பாருக்கும் செய்தி அனுப்பி கப்பலில் வரவிருக்கும் சுவாமியாருக்கு வேண்டிய காய்கறியும் பழங்களும் சற்று அதிகமாகவே இருப்பு வைத்துக் கொள்ளவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. கப்பல் புறப்பட இரண்டு மூன்று தினங்கள் முன்னதாகவே சுவாமிகள் பம்பாயிலிருந்து கல்கத்தா வந்தார். தனது குருவாகிய பக்திசித்தாந்தரின் சமாதிக்குச் சென்று வணக்கம் செலுத்தினார். 1965-ஆகஸ்டு 16-ஆம் நாள். ஜலதூதா கப்பல் நங்கூரமிட்டு கித்தர்பூர் துறைமுகப்பகுதியில் நின்று கொண்டிருந்தது. சைதன்ய சரிதாமிருதம் என்ற நூலைக் கையில் வைத்துக் கொண்டு ஒரு தகரப்பெட்டி, குடை சகிதமாக பிரபுபாத சாமியார் டாக்சியிலிருந்து இறங்கி வந்து கப்பலேறுகிறார்.

(தொடரும்)

# சர்க்கரை வியாதி–நீரிழிவு

— திரையன்

வீட்டின் முன்புறத்தில் சிறிய பூந்தோட்டம் போட விரும்பினார் எனது நண்பர். ஒரு நாள் காலையில் பாத்தி போட்டுக் குழி தோண்டிக் கொண்டிருக்கும் போது கடப்பாரை காலில் விழுந்து வலது காலின் முன்கட்டைவிரலில் இரத்தம் கசிந்தது. கால்கட்டு போட்டு, மாத்திரைகள் உட்கொண்டு வழக்கமான மருத்துவம் செய்தும் காயம் ஆறவில்லை. மருத்துவர் சர்க்கரை வியாதி இருக்குமோ என்று ஐயுற்றார். சிறுநீரைப் பரிசோதனை செய்து பார்த்தால், இவர் எண்ணியது சரியே என்று தெரிய வந்தது. ஆயின் இந்நோயின் அறிகுறிகள் யாவை ? நீரிழிவு நோய் என்று என்று இதற்குப் பெயர்வரக் காரணம் என்ன?

உணவில் இருக்கும் சர்க்கரை எரிக்கப்பட்டு (ஜீரணிக்கப் பட்டு)உடம்புக்கு வேண்டிய சத்து கிடைக்க வேண்டும்.சர்க்கரையை எரிக்கும் சக்தி கணைய நீருக்கு (Insulin) உண்டு. கணையம் தேவையான அளவு செரிமான நீரைச் சுரக்காதபோது உடலில் தேங்கும் சர்க்கரைச் சத்து இரத்தத்தில் கலந்து அதிகமாகி விடும். இதனில் ஒரு பகுதி சிறுநீர் வழியாக வெளியேறும். நோய் முற்றிய நிலையில் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய தொல்லையும் ஏற்படும். எனவே தான் இந்நோய்க்கு நீரிழிவு என்றும் ஒரு பெயருண்டு.

சர்க்கரையினை எரிப்பதால் வரும் சக்தி கிடைக்காமல் போகும்போது, உடல் தனக்கு வேண்டிய சக்தியினைப்பெறுதற்கு கொழுப்புச்சத்தினை நாடுகிறது. கொழுப்புச்சத்தும் குறையும் போது உடம்பு தசை நார்களை நாடுகிறது. இவ்வாறு கொழுப்பும், தசையும் குறையத் துவங்கியதும், சர்க்கரை வியாதிக்காரர் இளைத்துப் போகிறார். எந்தப் பணியும் செய்ய முடியாதவாறு களைத்து விடுகிறார். பெரும்பாலும் நாற்பது வயதுக்கு மேல் நீரிழிவு நோய் வருதற்கு வாய்ப்பு உண்டு. நாற்பது வயதுக்குள்ளேயே இந்நோய் யாருக்காவது வரக் கூடுமாயின், அவரது பெற்றோருக்கும் இந்நோய் இருந்திருக்கக் கூடும் என்று அனுமானிக்கலாம்.

சர்க்கரை வியாதி வந்த அத்துணை பேரும் இளைத்து விடுவார்கள் என்று வரையறுத்துக் கூற இயலாது. இந்த வியாதி இருந்தாலும், உடல் பருமனாக இருப்போரும் உண்டு. இவர்களுக்கு வேறு வகையான சிக்கல் இருக்கலாம். போதுமான கணைய நீர் சுரந்தாலும், அதனைத் தேக்கி வைத்துப் பணிபுரியச் செய்யும்

உயிரணுக்கள் (cells) செயலற்றுப் போவதும் உண்டு. இத்தகை யோருக்குத்தேவை மருத்துவர் கொடுக்கும் செயற்கையான இன்சுலின் அல்ல. இயன்ற அளவு உடற்பயிற்சியே. இப்பயிற்சியே உயிரணுக்களைத் தூண்டி இயங்கச் செய்து உடம்பிலுள்ள கணைய நீரைப்பயன்படுத்த உதவி புரியும்.

மஞ்சட்காமாலை நோய் வந்தால், நோயாளியின் ஈரல் பாதிக்கப்படும் என்பது பொது நியதி. ஆயினும் கணையமும் தனது நீர்சுரக்கும் தன்மையினை இழந்து விடுகிறது. சிறுகச்சிறுக உடல் குணமாகி வரும்போது கணையமும் பழைய நிலையை அடைந்துவிடும். கடுமையான மனக்கவலை, நெருக்கடி, சிக்கல் ஆகியவற்றால் தொடர்ந்து அலைக்கழிக்கப்படும் போதும் நீரிழிவு நோய் வருவது உண்டு. இரத்தக்கொதிப்பு, நெஞ்சு வலி ஆகிய வற்றினால் திடீர் மரணம் அடைவோரில் பாதி பேருக்கு மேல் நீரிழிவு நோய் உடையோராகத்தான் இருக்கின்றனர்.

சர்க்கரை வியாதி உள்ள பெண்கள் கருத்தரிக்க இயலாது. காசநோய் உள்ளோருக்குச் சர்க்கரை நோய் இருந்தால், இருமலும் இளைப்பும் குறையாது. தொத்து வியாதிகள் மற்றையோரை விட எளிதில் இவர்களைப்பற்றிக் கொள்ளும். நமது நாட்டில் நூற்றுக்கு நான்கு பேர் வீதம் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது ஒரு மதிப்பீடு. அதிகமான தாக உணர்ச்சியும், பசியும், எடை குறைதலும், அசாதாரணமான களைப்பும் சர்க்கரை வியாதியின் அறிகுறிகளாம். இரத்தத்தையும் சிறுநீரையும் சோதனை செய்து, நோய் இருந்தால் தக்க மருந்துகளை உட்கொண்டு நோயின் கடுமையினைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்நோயினை முழுதுமாகப் போக்கி விடுவது அரிது. நோயின் வேகத்தைக் கட்டுப்படுத்தலாம். அப்படியின்றி அதனை வளர விட்டால் இதயம், சிறுநீரகம், கண், நரம்புத் தொடர்பான நோய்களுக்கு எளிதில் இடங்கொடுத்து விடும். கால்விரல், நகம் ஆகியவற்றில் ஏற்படும் காயமோ, கொப்புளமோ விரைவில் குணமாகாது. கவனக்குறைவாக விட்டுவிட்டால், உயிரணுக்கள் அழுகிப் போய் (gangrene) கால் விரலைத் துண்டிக்க நேரிடும்.

ஐம்பது வயதுக்கு மேற்பட்டோர் இந்நோய் அணுகாதவாறு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பாகற்காய் வேக வைத்த நீரை உண்ணலாம். அரிசி உணவினைத் தவிர்த்து கோதுமை, மற்றும் கேழ்வரகுக் கஞ்சியோ களியோ ஒரிரு வேளைகள் உண்ண வேண்டும். இனிப்பான பாண்டங்களைத் தவிர்த்து கீரை, மோர், வாழைத்தண்டு போன்றவற்றை உணவுடன் சேர்த்துக் கொண்டால் நல்லது.

# இயந்திரக் கலப்பையினால் ஏற்படும் தீங்கு

வேளாண்குடிமகன் ஒவ்வொருவனும் ஏர் ஒன்றையும் மாடுகள் இரண்டையுமே நம்பியிருக்கிறான். இந்தியாவின் பல்லாயிரக் கணக்கான கிராமங்களில் பண்டு தொட்டு இன்று வரை இவைகளே அடிப்படையான உழவு சாதனங்கள் ஆகும். அறிவியல் வளர்ந்து வரும் இற்றை நாட்களில் இயந்திர உழவின் இன்றியமையாமை பற்றி வற்புறுத்திப் பேசப்படுகிறது. இயந்திரக் கலப்பையோ (Tractor) கதிரடிக்கும் கருவியோ தனிப்பட்டோரும் சொந்தமாக வாங்குதற்கு அரசினர் உதவி புரிகின்றனர். அரசுத் துறையினரும், ஊராட்சி ஒன்றியங்களும் சாதாரண விவசாயிகளுக்கு இக்கருவிகளை உழவு காலங்களில் வாடகைக்குக் கொடுக்கின்றனர். புஞ்சை நிலங்களில் மட்டுமே உழுது கொண்டிருந்த நிலைமை மாறி, நீர் பாய்ச்சி, சேறு நிறைந்த நன்செய் நிலங்களில் கூட இயந்திரக்கலப்பைகள் உழுகின்றன. போலந்து. ஜப்பான் போன்ற நாடுகளின் இயந்திரக்கலப்பைகள் இந்தியாவிலும் விற்பனையாகின்றன. அண்மையில் இயந்திர உழவு பற்றிப் பேசிய ஆங்கில வேளாண்மை நிபுணர்கள் இயந்திரக்கலப்பை மண்ணுக்கு இயல்பாக உள்ள தரத்தினையும், சக்தியினையும் பாழாக்கி விடுகின்றது என்கின்றனர். பயிர் செழித்து வளர்தற்கு காற்று, நீர், உரம் ஆகியன வேண்டும். இவற்றுள் காற்றையும், நீரையும் வேண்டிய அளவு எடுத்துக் கொள்ள வேண்டுமாயின், மண் பொல பொலப்புத் தன்மையுடன் இருக்க வேண்டும். இயந்திரக் கலப்பையின் வலிய சக்கரங்கள் வயலில் சுற்றி வரும்போது கிளறப்படும் மண்ணை விட அமிழ்த்தப்படும் மண் பகுதியே அதிகம். எனவே எளிய விவசாயிகள் தனியொருவரே கையினால் இயக்கும் சிறு இயந்திரக்கலப்பைகளைப் பயன்படுத்துதல் பொருத்தமானது என்று கருதப்படுகிறது.

— நன்றி SCIENCE TODAY

# யானைப் பரிசு

இந்தியா போன்ற நாடுகள் யானைகளை வெளி நாடுகளுக்கு அனுப்புவதைத் தடை செய்வது நல்லது. இந்த வேண்டுகோளை வெளியிட்டவர் ஒரு அங்கில நடிகையாவர். வெப்ப நாடுகளுக்கே உரிய மிருகங்களுள் யானையும் ஒன்று. ஆப்பிரிக்க நாடுகளிலும், இந்தியா, பர்மா போன்ற ஆசிய நாடுகளிலும் காடுகளில் தனனிச்சையாகத் திரியும் இம்மிருகங்கள் இலை, தழை மூங்கில், கரும்பு, வாழை போன்ற தாவரங்களையே தின்று வாழும் தன்மையன. நினைவாற்றலும், சுறுசுறுப்பும் கொண்டயானைகள் கூட்டங் கூட்டமாகவே வாழும் பழக்கம் உடையவை. புலி, சிங்கம் போன்ற வன விலங்குகளை ஒத்த நெஞ்சுரமும் வேகமும் உடையவை என்றாலும அவற்றைப் போல இரத்த வெறி பிடித்தவை அல்ல. யானைகளை மனிதன் பிடித்துச் சங்கிலியால் பிணித்து காடுகளில் மரங்களை நகர்த்தவும், தூக்கவும் பழக்கியது அண்மைக்காலத்தில் தான. இந்தப்பணி யிலும் அவைகள் தங்கள் இருப்பிடமான காடுகளை விட்டு வெளி வருவதில்லை. ஆனால் அண்மைக்காலமாக இவை பிரிட்டன் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு காட்சிப் பொருளாக அனுப்பப் படுகின்றன. இங்கிலாந்து நாட்டில் மட்டும் 20 இந்திய யானைகளும்' 25 ஆப்பிரிக்க யானைகளும் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். சென்ற மாதம் 18 வயதான ஒரு ஆப்பிரிக்க யானை இங்கிலாந்து மிருகக்காட்சி சாலையில் இறந்து விட்டது. வர்ஜீனியா மெக்கன்னா எனும் இங்கிலாந்து நடிகையும் அவளது கணவரும் இதுபற்றி ஆராய்ந்து காட்சிச் சாலைகளில் யானை களை அடைப்பதை நிறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் வடுத்துள்ளனர். இதற்கென்று (Zoo check) ஒரு சங்கமும் தொடங்கி யுள்ளனர். உண்ணுவதும், மலம், நீர் கழிப்பதும் ஒரே இடத்தில் இருப்பதால் யானைகளின் நலன் கெடுகிறது. ரொட்டி முட்டைக் கோஸ், வாழைப்பழம். ஓட்ஸ், காரட், உருளைக்கிழங்கு போன்றவை உணவாகக் கொடுக்கப்பட்டுகின்றன. இவற்றுள் பச்சை உருளைக் கிழங்கு யானைக்கு உகந்த உணவு அல்ல. முண்டும், முடிச்சு மாகவும், பச்சையாகவும் இருப்பவை நச்சுத் தன்மை உடையவை. எனவே குறுகிய இடத்தில் போட்டு அவற்றை அடைப்பதை விடுத்து யானைகளை பாதுகாப்பான காடுகளில் (Reserve Forests) வளர்க்க வேண்டும் என்பதும் அச்சங்கத்தினரின்வேண்டுகோளாகும். யானைகளை ஏற்றுமதி செய்கின்ற இந்திய நாடும் இது பற்றி சிந்திக்க வேண்டும்.

# நூல் மதிப்புரை

*பெயர்* :- சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்வளர்ச்சி
*ஆசிரியர்* :- டாக்டர். மு. கோவிந்தராசன்
*வெளியீடு*:- சரசுவதி பதிப்பகம்
10/18 பீட்டர்ஸ் சாலை காலனி - சென்னை-14

நூற்றாண்டு விழா கொண்டாடிய சென்னைப் பல்கலைக் கழகம் தமிழிலக்கிய இலக்கண வளர்ச்சிக்கு எந்த அளவு பணி-யாற்றியுள்ளது என்பதை இந்நூல் விளக்குகின்றது. மேலோட்ட மாக நோக்கின் ஒரு தொகுப்பு நூல் போலத் தோன்றும் இந்த ஆய்வேடு, நூலாசிரியரின் அரிய முயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு. பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தோற்றமும் வளர்ச்சியும், பல்கலைக்கழக வெளியீடுகள், இதழ்கள், ஆய்வேடுகள் பாடநூல் கள் என்றிவ்வாறு பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் அமைந் துள்ளன. இருப்பினும் முதற்கட்டுரையான பல்கலைக்கழகக் கல-வியின் நோக்கம் நூலின் தலைப்புக்குப் பொருத்தமாகத் தோன்ற வில்லை. பள்ளிக் கல்விச் சீரமைப்புக் குழுக்களின் அறிக்கையினை இந்த நூலுக்குள் திணிக்க வேண்டியதில்லை. சென்னைப் பல்-கலைக்கழகம் தொடங்குதற்கு முன்னமேயே இருந்த கல்லூரிகளின பட்டியல் கொடுக்கும்போது இன்றியமையாத செய்தி ஒன்று விடப்பட்டுள்ளது. 1831-ஆம் ஆண்டிலேயே கிழக்கிந்தியக் கம்-பெனியார் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் ஒரு கல்லூரி ஏற்-படுத்தியிருந்தனர். அதுவும் கல்கத்தாவில் போர்ட் வில்லியம் கல்லூரியும் தான் இந்நாட்டில் முதன் முதலாகத் தோன்றிய உயர் கல்வி நிலையங்களாகும். நூலின் 27-ஆம் பக்கததில் தமிழ்த் துறை நிறுவுதற்கு ஒரு லட்சரூபாய் அளித்துள்ள இரு மகளிர் பாராட்டப்பட்டுள்ளனர். அவர்கள் யாவர் என்று தெரியவில்லை. வையாபுரிப்பிள்ளையின் லெக்ஸிகன் பற்றி தெளிவாகவும், விவர-மாகவும் செய்திகளைக் கூறியிருக்கலாம். 70, 104 ஆகிய பக்கங்-களில் 'பெருமையினைத் தட்டிச் செல்பவர் என்ற சொற்றொடர் பத்திரிகைத்தமிழினை நினைவுபடுத்துகிறது. இலக்கிய மரபற்ற இதனைத் தவிர்த்திருக்கலாம் தமிழின் முதல் அகராதியினை சிதம்பர ரேவண சித்தர் 1595-இல் வெளியிட்ட அகராதியே தமி-ழில் அத்துறையின் முதல் நூல் என்பதுவும், மறைமலையடிகள் சென்னைப் பல்கலைககழகத்தில் எச்சந்தர்ப்பத்திலும் உரை யாற்றியதாகத் தெரியவில்லை என்பதுவும் புதிய செய்திகள். தமிழ்த்துறைத் தலைவர்களின் புகைப்படங்களும், அழகிய அட்டையும், தெளிவான அச்சும் நூலின் பாராட்டத்தகும் இயல் பினவாகும்.

# ஹரிநாராயண ஆப்தே

ஆர். பி. ஜோஷி

சாகித்திய அக்காதெமி
29, எல்டாம்ஸ் சாலை
சென்னை-18

விலை : 4/-ரூ

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில், மராத்திய மொழியின் பத்திரிகையாசிரியரும், நாவலாசிரியரும் ஆகிய ஹரி நாராயண ஆப்தே என்பாரை அறிமுகப்படுத்துவதே இந்நூல். ஹரிபாவர் என்று அழைக்கப்படும் இவர் (1864 - 1913) 49 ஆண்டுகள் வாழ்ந்தவர். பூனாவில் பிறந்து பம்பாயில் சில காலம் வாழ்ந்து மீண்டும் பூனாவுக்கு வந்து தனது இறுதிக் காலம் வரை இலக்கியப்பணி புரிந்தவர். தாய் மொழியாகிய மராத்தியேயன்றி ஆங்கிலமும் வடமொழியும் இளமையிலேயே கற்றுக்கொண்டவர் பின்னர் வங்காளம், பிரெஞ்சு ஜெர்மன் மொழிகளையும் சிறப்புறக் கற்றவர். அறிவுப்பசி மிகுந்தவராய் ஏராளமான நூல்களைப் பயின்றவர். ‘காரமானுக்’ எனும் பத்திரிகையினைத் தொடங்கி நடத்தியவர்.

நூலாசிரியர் ஹரிபாவரின் பல்வேறு சாதனைகளை இச்சிறு நூலில் திறம்பட வெளிப்படுத்தியுள்ளார். பல்கலைக்கழக பட்டம் பெறவில்லையாயினும் புலமைமிகுந்தவர்; நடைமுறைக்கு ஒவ்வாத மனக்கோட்டைகளை கட்டாதவர்; இருபத்தி நான்கு ஆண்டுகளில் இருபத்தி இரண்டு நாவல்களை எழுதியவர்; குறுகிய மொழி யார்வமின்றி வடமொழி வங்காள ஆங்கில இலக்கியங்களை நிரம்பப் படித்தவர்; இளமையிலேயே ஷேக்ஸ்பியர் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் எழுதியவர் எனும் செய்திகளே அவை. நூலின் பின்னணி எனும் பகுதி ஹரிபாவரின் வாழ்க்கையினைச் சுருங்கிய அளவில் தருகிறது. இரண்டாவது கட்டுரை ஹரிபாவரது நாவல்களை ஆழ்ந்து கற்க விரும்புவார்க்கு ஒரு தோற்றுவாய் எனலாம். சமூக நாவல்கள், வரலாற்று நாவல்கள் பற்றிய கட்டுரைகளோடு பிறபடைப்புகள் அவரெழுதிய இன்றியமையாத நூல்களைப்பற்றியவையே கடைசி இரண்டு கட்டுரைகள். நூலின் கட்டமைப்பு பாராட்டத் தகுந்தது. சின்னச் சம்பவங்களுக்கும்

சின்னப் பாத்திரங்களுககும் தேவைக்கு மேறபடட முக்கியத்துவம் கொடுப்பது ஹரிபாவரது வழக்கமான குறைபாடு" எனும் பகுதி நூலாசிரியரின் நேரிய ஆய்வுத்திறனை புலப்படுத்துகிறது.

மொழி பெயர்ப்பு எளியநடையில் அமைந்துள்ளது. ஆயினும் சிற்சில இடங்களில் சொல்லுக்குச் சொல் பெயர்த்தது போல் இருப்பதோடன்றி, தமிழ் மரபுக்குப் பொருந்தாத தொடர்களும் காணப்படுகின்றன.

(i) பல பேர்களுடைய எழுத்துக்களை வாசித்தார். (பக்:6)

(ii) தந்தக் கோபுர வாசியாக இருந்ததில்லை - (பக் : 10)

(iii) சொற் பரிமாற்றமும் சேறு எறிதலும் நடந்தன - (12)

மறுபதிப்பு வந்தால், இவைகளைத் திருத்தி அமைத்து நூலை வெளியிட்டால் தமிழுக்கு நல்லது. — அசாமி

---

## தஞ்சைத் தமிழ்ச்சங்கம்

### தஞ்சாவூர்.

சென்ற ஜூன் திங்கள் 27- ஆம் நாள் வெள்ளிக்கிழமை தஞ்சாவூரில் ஒரு தமிழ்ச்சங்கம் தொடங்கப்பட்டுள்ளது. பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தியைத் தலைவராகவும், ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஸ் அதிகாரி உ. சுப்பிரமணியன் அவர்களைத் துணைத்தலைவராகவும் கொண்டுள்ள தமிழ்ச்சங்கம் பற்பல ஆய்வு நூல்களை வெளிக் கொணரும் என்று நம்புகிறோம். அரசினரும் தமிழன்னைக்குக் கட்டியம் கூறும் இக்காலத்தில் தஞ்சைத் தமிழ்ச்சங்கமும் தன்னால் இயன்ற நற்றொண்டு புரிதல் வேண்டும். விழாவின் தொடக்க நாளன்று மதுரை, கரந்தை, திருச்சி தமிழ்ச்சங்கங்களின் பிரதி நிதிகளும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை ஆற்றினார்.

## மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | பன்னூற்றிரட்டு | 5.00 |
| 2. | தமிழ்ச் சொல்லகராதி | 25.00 |
| 3. | ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம் | 3.00 |
| 4. | சுகசந்தர்சன தீபிகை | 2.00 |
| 5. | மாறனலங்காரம் (பொருளணியியலுரை) | 5.00 |
| 6. | பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) | 2.00 |
| 7. | குருகை மான்மியம் | 10.00 |
| 8. | டி சி. ஸ்ரீநிவாசய்யங்கார் நினைவு மலர் | 1.00 |
| 9. | பெருந்தொகை | 15,00 |
| 10. | செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு | 5,00 |
| 11. | செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) | 10.00 |
| 12. | கோவை கலம்பக நூல்கள் | 12.00 |

1. மாறனகப்பொருளும் திருப்பதிக் கோவையும்
2. மதுரை மும்மணிக் கோவை
3. சிராமலைக் கோவை
4. கலசைக் கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினா விடை

13. உலா நூல்கள் — 10.00

1. திருவாரூருலா
2. திருச்சிறு புலியூர்

3. விக்கிரம சோழனுலா
4. கடம்பர் கோவில
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

14. பாமாலை நூல்கள் 12.00

1. திருப்பணிமாலை
2. சூடிக் கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக்குற்றால மாலை
4. திருப்புல்லாணி மாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நானமணிமாலை (மூலமும் உரையும்

15. இலக்கிய நூல்கள் 12.00

1. ஸ்ரீ முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (மூலமும் உரையும்)
5. சங்கர நயினார்கோவில் அந்தாதி)
6. திருத்தணிகைத் திருவிருத்தம்
7. நான்மணிக் கடிகை (மூலமும் உரையும்)

16. இலக்கண நூல்கள் 5.00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

17. மநீஷா பஞ்சகம் 6.50

1, மநீஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதத்தம்

"செந்தமிழ்',

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய "செந்தமிழ்" முத்திங்கள் இதழாகும். ஆண்டுச் சந்தா ரூ. 8.00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாரராராகச் சேர்ந்து. பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொளகிறோம்.

குறிப்பு : 1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25% முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு புத்தகங்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.

2 விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15% கழிவு கொடுக்கப்படும்.

3. புத்தகங்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை 1.

---

## வணக்கங்கள் பலவகை

அலுவலகத்திற்குள் நுழையும் உயர் அதிகாரி தனது ஏவலனைக் கண்டதும் குனிந்து அவன் பாதத்தைத் தொட்டு விட்டு அறைக்குள் நுழைகிறார். பஞ்சாபில் நிரங்காரிகள் பின் பற்றும் மரியாதை இது.

அன்புக்கும் மரியாதைக்கும் உரிய நண்பர்களையும் பெரியோர்களையும் கை கூப்பி வணங்குதலை மரபாகக் கொண்டுள்ளது இந்து சமயம். முகமதியர்கள் மார்பாரத் தழுவி முதுகினைத் தட்டி வணக்கம் கூறி கொள்வர். உருசிய நாட்டில் வரவேற்புக்கும், வணக்கத்திற்கும் அறிகுறியாக கன்னங்களில் முத்தமிட்டுக் கொள்வர். முகத்தோடு முகம் நெருங்கி மூக்கினை உரசிக் கொள்வது துருவப் பகுதிகளில் வாழும் எஸ்கிமோக்களின் பழக்கம். நிலமும், நிறமும், மொழியும், பழக்க வழக்கங்களும் வேறுவேறு தான். ஆயினும் பகைமையின்றிப் பழக வேண்டும் என்கிற மானுடப் பண்பாடு ஒன்று தானே !

## தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Shakespeare & Ilango as Tragedians — ரூ. 65 / —
   —K. Chellappan
2. கணிப்பொறி ஒருங்கும் பேசிக் மொழியும்
   — கா.செ. செல்லமுத்து — நூலகப்பதிப்பு ரூ. 65 / —
   மாணவர் பதிப்பு ரூ. 35 / —
3. தமிழில் காப்பியக் கொள்கை
   — முனைவர் து. சீனிச்சாமி — ரூ. 79 / —
4. சிலப்பதிகாரம்
   — பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாத ஐய்யர் — ரூ. 125 / —
5. புதிய இராகங்கள்
   — து. ஆ. தனபாண்டியன் — ரூ. 150 / —
6. குறுந்தொகை (மூலமும் உரையும்)
   — பதிப்பாசிரியர் சண்முகம்பிள்ளை — ரூ. 140 / —
7. The Catalogue of Palm Leaf Manuscripts in the Tamil University
   — K.C. Chellamuthu, T. Padmanaban & P.V. Nagarajan — ரூ. 55 / —
8. நாடகக்கலை
   — தமிழாக்கம் : மு. இராமசாமி — ரூ. 65 / —
9. போகர் வைத்தியம் 700
   — சே. பிரேமா & ப. வெ. நாகராசன் — ரூ. 112 / —
10. பொறுப்பு
    — தமிழாக்கம் : இரா. சுப்பராயலு — ரூ. 25 / —
11. தொல்காப்பியம் — பொருளதிகாரம் — செய்யுளியல்
    — இளம்பூரணர் உரையுடன் — ரூ. 145 / —

மேற்கண்ட நூல்களை நேரில் / தபால் வழி பெறுவோருக்கு 30% கழிவு அளிக்கப்படும்.

மாணவர் பதிப்பில் நூல்களைப் பெறுவோருக்கு 25% கழிவு அளிக்கப்படும்.

பேராசிரியர், ஆய்வு மாணவர்க்கு 40% கழிவு உண்டு. அஞ்சல் செலவு தனி.

தங்கள் தேவைக்குப் "பதிப்புத்துறை இயக்குநர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 613 001, தமிழ்நாடு" என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.